தென்மொழி



12 FEB 1969
MADRAS

அண்ணா இரங்கற் பத்து!

எண்ணா யிரங்கோடி உள்ளமும்
ஆவியும் ஏக்கமுற்றுப்
பண்ணா யிரங்கோடி பாடி
வருந்திப் பரதவித்தே
உண்ணா துறங்கா துழன்றதும்
மாண்டதும் உண்மையென்றால்
அண்ணா துரையாம் அறிஞர்
புகழ்க்கோர் அளவுமுண்டோ?

மக்களை ஈர்த்த தலைவன்
அரசியல் மாண்புணர்ந்தான்
ஒக்கல் அவரென எண்ணி
உழைத்தான்; உழைப்பிடையில்
பக்கல் இருந்தவர் நெஞ்சும்
உயிரும் பதைபதைக்கப்
புக்கல் நலம்என் றுயிராய்ப்
புகுந்தான் புகழுடம்பே!

பாலை நிகர்த்தது நெஞ்சம்!
பனிநிகர் பைந்தமிழ்ச்சொல்!
வேலை நிகர்த்தது கூர்விழி!
நீண்டு விரிந்தநெற்றி
நூலை நிகர்த்தது; கல்லாப்
பொதுநிலை மாந்தருக்கும்
சோலை நிகர்த்ததே அன்னவன்
செந்தமிழ்ச் சொற்பொழிவே!

சுவடி: 6, ஓலை 12.
சுறவம் தி. பி. 2000.

(தொடர்ச்சி கடைசி அட்டைப் பக்கம்)

நமக்கு வந்த மடல்கள்.

(பகை எனக்கு விழிப்பூட்டுகின்றது, வசைகள் என்னை உறுதியாக்குகின்றன. பொய்ச் செய்திகள் பாதையில் உள்ள பள்ளம் படுகுழிகளை எனக்கு எச்சரிக்கின்றன; நேர்மை எனக்கு வழிகாட்டுகிறது; உண்மை எனக்குத் துணை வருகின்றது; கடமை என்னை வழிநடத்துகின்றது; நட்பு என் அயர்வைப் போக்குகின்றது; தமிழ் எனக்கு ஒளி தருகின்றது; தாயகம் என்னை எதிர்நோக்குகின்றது; இறையுணர்வு எனக்கு நம்பிக்கையூட்டுகின்றது என் வாழ்க்கைக் குப்பின் உள்ள எச்சமே நான் யார் என்பதை உலகுக்கு உணர்த்தும்! வெறும் வாய்கள் மனத்தை எடைபோடா!—பெருஞ்சித்திரன்.)

0 நெடுங்காலமாக எழுத நினைத்தது இது... தொல்லையும் மனத்துயரமும் மிகுதியும் தங்களுக்கிருக்கலாம்...ஐயா...பிழைத்தவை பொறுத்தலெல்லாம் பெரியவர் கடமை என்பது தாங்கள் அறியாததா? அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல, தம்மை இகழ்வாரைப் பொறுத்தலே சிறந்தது. 'பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை மறத்தல் அதனினும் நன்று' என்ற பொன்னுரை நீங்கள் அறியாததா?

—த. முத்துசாமி, க. இ; பாம்பூர், முகவை (7–1–69)

0 தங்கள் ஏட்டின் குறிக்கோளினை யான் புரிந்து கொண்டது—தனித்தமிழில் (பிறமொழிக் கலப்பின்றி) எப்பொருள்பற்றியும் எடுத்துரைத்தல் இயலும் என்பது மட்டுமன்றிச் சிறப்புமாகும் என்பதே யாம். எனவே எழுதப்பெறும் பொருள் யாதாயினும் தூய தமிழ்ச் சொற்களால் கூறப்பெறல் வேண்டும். இந்தக் குறிக்கோளில் அவ்வப்பொழுது நாட்டின்கண் காணப்பெறும் சீர்கேடுகள்பற்றி ஈட்டியெனப் பாயும் சொல்லாற்றல் மிக்க பாடல்கள் கட்டுரைகள் பல எழுதியுள்ளீர்கள். அவை என்னை மிகவும் கவர்ந்தன. தங்கள் தனித்தமிழ் இயக்கத்தால் பல்லாயிரக் கணக்கான மாணவர்கள் கவரப் பெற்றுள்ளனர். இவர்களில் பலர் நாளைய அதிகாரிகளாக மாறத்தக்கவர்கள். எத்தனை எத்தனையோ அறநூல்களைப் பயின்று வந்த அறிவாளிகளாயினும் அவர்களில் மிகப் பெரும்பாலோர்—கையூட்டால் வாழ்வைச் சிறக்கச் செய்யும் சிறுமைக் குணமுடையோராய் மாறுகின்றனர். சாதி உணர்வுக்குக் கோபுரம் எழுப்பும் வேலையை அதிகாரிகளாக வந்து மணமுடித்தவுடனே தொடங்குகின்றனர். இந்த இழிநிலைக்கு ஆளாகாவாறு தங்கள் எழுத்தால் கவரப்பெற்ற மாணவர்களுக்கு எடுத்துரைத்தால் பயன் தராமலா போகும்? இதனை எச்சரித்துத் தங்கள் எழுதுகோல் அசைந்தால் அவர்கள் உள்ளம் சற்று அசையாதா? ஏழை எளியவரை, இல்லாமை கரணியமாய்க் கல்லாமற்போன வறியவரை, நாய்களினும் கீழாய்—நடைப்பிணமாய் எண்ணிக் கீழ்மைப் படுத்தி வெறுத்தொதுக்கும் மடமைக்கு ஆளாகும் 'அறிவாளிகளை'ச் சாடி, தங்கள் எரியீட்டிப் பாடல்கள் வெளிவந்தால் நலமன்றோ? எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்தி, கல்லாமை எனும் இருட்டை அறிவுக் கதிரவன் விரட்ட, வாழ்வு சிறக்க நல்லிலக்கியங்களும் அவை காட்டும் 'புதிய ஒழுக்கங்களும்' மலரத்தக்க வகையில் நடுநிலைமைக் கருத்துகள் தங்கள் தீம்பாடல் தேனாக வெளிவருதல் நல்லதன்றோ? தனித்தமிழோடு, தமிழர்களின் உயர் வாழ்வுக்குப் பயனளிக்கும் கருத்துகளையும் இனிமேல் தங்களின் ஏட்டில் படித்து மகிழ என் உள்ளம் விழைகின்றது.

—சூ. அமலா, தேனகம், திண்டுக்கல்.

(தொடர்ச்சி 3–ஆம் அட்டைப்பக்கம்)



தென்மொழி

இலக்கிய இதழ்

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

சுவடி-6: ஓலை-12.

சுறவம் தி. பி. ௨௦௦௦ (1969 பிப்ரவரி)
பொறுப்பாசிரியர்:-பெருஞ்சித்திரன்.
தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.

தலையிழந்தது தமிழகம்!

ஆ! தமிழகம் ஓர் அரிய தலைவரை, மக்கள் வழிகாட்டியை, சொல்லாற்றல் மிக்க வல்லார் ஒருவரை, செயலாண்மை கொண்ட வினைமறவரை இழந்து ஆற்றொணாத் துயரில் அமிழ்ந்து கிடக்கின்றது. எவ்வகையிலும் ஈடுசெய்ய வியலாத இவ்விழப்பு தமிழினத்தின் மீது விழுந்த பேரிடியாகும். இவ்வினத்தின்மீது கவிந்த வல்லிருளாகும். இப் பேரிடியினின்றும் பேரிழப்பினின்றும் தமிழகம் தன்னைக் காத்துக்கொள்ளல் வேண்டும். அல்லாக்கால் இந்நாடும் இந் நாட்டுமக்களும் இந்தத் தலைமுறையில் தலையெடுக்க முடியாது; முடியவே முடியாது. பாவேந்தர் பாரதிதாசனாருக்குப் பின் தமிழர் முன்னேற்றத்தில் ஏற்பட்ட இப் பெருஞ் சறுக்கலினின்று தமிழகம் இனி மீள வேண்டுமானால் இது பெறவேண்டிய இனவுணர்வும், இன ஒற்றுமையுமே கரணியங்களாக அமைய முடியும்.

மறைந்த தலைவர் அறிஞர் திரு. அண்ணாத்துரை அவர்கள் தமிழக வரலாற்றில் தோன்றிய விடிவெள்ளி ஆவார். தமிழுக்காகவும் தமிழருக்காகவும் இவர் அரும்பாடு பட்டு வருகையில் சாவினால் கவரப் பெற்றார். இவர் இறப்பைத் தமிழ் மக்கள் திடுமெனத் தாங்கிக்கொள்ள மாட்டார் என்ற காரணியம் பற்றியோ என்னவோ, இவர் ஏறத்தாழ ஐந்தாறு திங்களாக நோய்வாய்ப்பட்டுப் படிப்படியாகத் தம் மறைவை ஏற்படுத்திக்கொண்டார். இப் பகுத்தறிவுப் பகலவன், தமிழர்க்கெல்லாம் ஒளிநல்கி வந்த இத் தலைஞாயிறு மீளா இருளில் பட்டொளிந்தது. இந்நிலையில் நெஞ்சிடிந்து, செயலிழந்து நிற்கும் தமிழர் தம் நம்பிக்கையை அறவே இழந்து விடாமல், தாம் இருக்கின்ற நிலையினின்று மேன்மேலும் உயர்ந்து-போகும், உய்ந்து போகும் வழிகளைப் பின்பற்றி நடையிட வேண்டுவது மிகவும் இன்றியமையாததாகும். அண்ணாவைப் பின்பற்றி இயங்கும் இவ் வமைச்சரவைக்கும் நாம் விடுக்கும் வேண்டுகோளும் இதுவே.

அண்ணா அவர்கள் நமக்காக, நம் மக்களுக்காகச் செய்தவற்றை எண்ணிக் கணக்கிடுவதுடன் நாம் அமையாது, அவர் செய்யாமல் விட்டுச் சென்றவற்றையும் இக்கால் நாம் நினைவிற்குக் கொண்டு வருதல் வேண்டும். அவர் தம் வாழ்க்கையில் செய்யத் தவறியவற்றை நாம் மேற்கொண்டு செய்யும் முயற்சியில்தான்-செய்து முடிப்பதில் தான் நாம் அவரை, அவர் ஆற்றலை முழுமையாக்கிக் காட்டமுடியும். அண்ணா அவர்கள் தமிழ் வரலாற்றைப் பொறுத்தமட்டில்-தமிழரைப் பொறுத்தமட்டில் செய்த அரும்பெருஞ் செயல் ஒன்று உண்டு. அது தான் முன் எக்காலத்திலும் காண முடியாத-எவராலும் செய்ய முடியாத-இதுவரை தமிழர்க்குள் இருந்திராத பெரியதொரு கூட்டுணர்ச்சியை, ஓர் இனப்பற்றைத் தமிழர்க்கிடையில் உண்டாக்கிக் காட்டியதாகும். இவ் வரும்பெரும் விழிப்புணர்ச்சியே ஓரினம் தன்னைக் காத்துக் கொள்ள முதற்கண் எழுப்பிக்கொள்ள வேண்டியதொரு வல்லாற்றல் ஆகும். தன்னினத்தை நிலைப்படுத்திக்கொள்ள அமைத்துக்கொள்ள வேண்டியதோர் அடிப்படையுமாகும். இவ்வரிய இனவுணர்வை அறிஞர் அண்ணா அவர்களால்தான் ஆக்கிக் காட்ட முடிந்தது என்பதை எவராலும் மறக்கவோ மறுக்கவோ முடியாது. சமய, குல, கட்சிப் பாகுபாடுகளில் தன்னைச் சிதறடித்துக்கொண்ட தமிழினத்தை அண்ணா என்ற ஓர் அரிய காந்தக் கல்லே ஒருங்கிணைத்தது என்னும் அரிய உண்மை தமிழர் வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். அண்ணா இல்லையானால் தமிழன் தன் அயர்ந்த

தூக்கத்தினின்று இன்னும் விடுபட்டிரான்; தன் கால்களில் பிணிக்கப் பெற்றிருக்கும் அடிமை விலங்கைத் தகர்த்தெறிய முற்பட்டிரான்; தான் விடுபட்டு மீண்டுவரா வழியில் தன்னைச் சுற்றிப் படர்ந்திருக்கும் குல வேறுபாட்டுப் பாசிப் பின்னல்களினின்று தன்னை விடுவித்துக் கொள்ள முயன்றிரான். பெரியாரால் சுட்டிக்காட்டப் பெற்று அண்ணா வால் செயற்படுத்தப் பெற்ற இந்தத் தமிழின ஒற்றுமை-விழிப்புணர்வு சரிந்து போகுமானால், நெகிழ்ந்து போகுமானால், முப்பது முப்பத் தைந்து ஆண்டுக்கால பெருமுயற்சி-பேருழைப்பு காலக் கல்லின்மேல் போட்டுடைத்த கண்ணாடி உருவம் போல் சிதறி, இனி என்றுமே கூட்டிச் சேர்க்க முடியாபடி, சுக்கல் நூறாகப் போய்விடும் என்பதைத் தமிழர் ஒவ்வொருவரும் தம் உள்ளத்தே ஆழப் பதித்துக் கொள்ளல் வேண்டும்.

அண்ணா அவர்களை இழந்து துடிக்கும் தமிழ்நெஞ்சங்கள் இனி அண்ணாவையே நினைந்துகொண்டு செயல் மறந்து இருந்துவிடல் கூடாது. அண்ணாவை நம் முன்னேற்றப் பாதைக்குக் கொண்டு செலுத்தும் ஓர் அடையாளக் குன்றாக, விடுதலை நாட்டிற்கு அழைத்துப் போகும் ஓர் ஒளிமிக்க கலங்கரை விளக்கமாக நாம் கருதிக் கொள்ளல் வேண்டும். அண்ணாவின் புகழ்ப் பண்ணில் நம் இனத்தின் விடுதலைப் பண்ணும் கலந்து முழக்கப் பெறல் வேண்டும். அண்ணாவின் புகழ்மாலையில் விடுதலை மலரும் கோக்கப் பெறுதல் வேண்டும். அண்ணாவின் சுட்டு விரலை, தம்பிகள் இனி அரசியலில் ஒப்போலைக்காக மட்டுமன்றி நம் விடுதலைச் செலவிற்குக் காட்டும் நல்வழிக்காகவும் பயன்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். அவரை ஓர் ஆற்றல் பொருந்திய முதலமைச்சராகக் காட்டுவதைவிட, ஏற்றம் பொருந்திய விடுதலை மறவராகவே காட்டுதல் வேண்டும். அவரைத் தென்னாட்டுக் காந்தியாக உருவகித்து மகிழ்வதைவிட அடிமைத் தமிழினத்தின் ஆபிரகாம் இலிங்கனாக இளைஞர்க்கு அறிமுகப்படுத்தி வரலாறு எழுத வேண்டும். மொத்தத்தில் அவரை வைத்து நம் குறைபாடுகளை மறைத்துக் கொள்ள முயற்சி செய்யாமல், அவரைக் கொண்டு நம் நிறைபாடுகளை-நம்பிக்கை எண்ணங்களை வளர்த்துக்கொள்ளல் வேண்டும். இது, இத் தமிழினத்தின் மீளா அடிமைத்தளையை அவிழ்த்தெறிவதையே தனது தலைமைக் குறிக்கோளாகக் கொண்ட அழித்தெழுத முடியாத வாழ்வோவியமாகத் தன் உள்ளத்தில் பதித்துக் கொண்ட ஒரு விடுதலை உள்ளத்தின், அங்காந்த நடுநிலை உணர்வின் வேண்டுகோளாகத் தமிழர்முன் படைக்கின்றேன். மற்றப்படி சாணேறி முழஞ்

சறுக்கும் தமிழினத்தின் முன்னேற்றம் இந்த நூற்றாண்டிலன்று இனி எந்த நூற்றாண்டிலுமே கைவராத கனவாகவே கலைந்துபோகும் என்பதை எச்சரிக்கையோடு கூற விரும்புகின்றேன்.

என் அருமைத் தமிழினமே, அண்ணாவின் புகழ் குன்றின்மேல் இட்ட பொன்று ஒளிவிளக்கு! வாடாத தமிழ்மாலை! ஆனால் அவ்விளக்கொளியால் குருடர்களாகிய நாம் விளக்கம் பெற்று உய்தல்வேண்டும் என்பதை மறந்துவிட வேண்டா. அத் தமிழ் மாலையைக் கொண்டு நாம் வழிபட வேண்டுவது விடுதலைத் தெய்வத்தையே என்பதைக் கருதாமல் விட்டுவிட வேண்டா. அண்ணாவின் புகழெழுத, தமிழ்ச் சொற்களத்தனையும் இணைத்துப் பின்னி பாமாலையாகப் படைத்துக் காட்ட முடியும். இது வெறும் எழுத்தன்று; முன்னிவரும் பேருணர்வால் தொடுத்தெடுத்த சொல் தொடையல்; நன்றியுணர்வால் வடித்தெடுத்த கண்ணீர் முத்துகள்! ஆனால் அம்மாலையால் நம் அளப்பரிய தமிழ் மொழியும் தமிழினமும் விழிப்புற்றுவிட முடியுமா? எண்ணிப் பாருங்கள்: அண்ணா அண்ணா என்று நீவிர் அழுதுமுழுங்கும் ஓலக்குரலில் நாம் விடுதலைக்காக அண்ணாந்து நிற்கும் ஏக்கம் கலந்தொலிப்பது உங்களுக்குப் புலப்படவில்லையா? அப்பெருமகனின் பூதவுடலுக் கருகில் நிற்கையிலும், அது புதைக்கப்பெற்ற புதைமேடைக் கருகில் நாம் வந்து நிற்கையிலும் தமிழர் விடுதலை வரலாற்றின் தலைமறவன், தனி முன்னோடி நமக்கெனவே வீழ்ந்து பட்டதாக உங்கட்கு நினைவு வரவில்லையா? அவரமைத்த அரசியல் தமிழ்த்தாய்க்கமைந்த இருக்கை மேடை என்பதை மீட்டும் நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். நம் கட்சி வேறுபாடுகள், இன இழிவுகள், மன மூட்டங்கள், சொற்கோட்டங்கள் அத்தனையும் துடைத்தெறிந்தாலன்றி, நாம் அப்பெருமகன் அருகே நெருங்கவும் அருகதையற்றவர்களாகப் போய்விடுவோம் என்பதை நினைவில் இறுத்திக் கொள்ளுங்கள்.

மறைந்துபோன அத்தலைமகன், தானை மறவன், விடுதலை முன்னோடி, பகுத்தறிவுப் பேராசிரியன் பெரியார் பெற்றெடுத்த முதற் பிள்ளை, தமிழர்களின் மறுமலர்ச்சியைக் காணத் துடித்த அத் தமிழ்க் களிறு, தம் வாழ்நாளெல்லாம் நமக்காகவே நாம் உய்யும் பொருட்டே எண்ணினான்; இருந்தான்; உண்டான்; உடுத்தான் என்பதை நாம் மறக்கக் கூடாது. ஆனால் அவனைத் தன்னவனுக்கிட எவரும் எண்ண வேண்டா. அவ் வீறுமகனின் நடுகல் நம் விடுதலைப் படையின் வரலாற்றுப் பாசறையாகக் கருதப் பெற்றுப் பொதுமை யுணர்வெழுப்பும் பட்டடைக் கூடமாக நமக்குக் காட்டப் பெறவேண்டும். அவன் எண்

ணிய எண்ணங்கள் ஏராளம்; எண்ணி வெளிவந்தன சில. அமைத்த திட்டங்கள் பலகோடி; ஆக்கி முடித்தன ஓரிரண்டு. இந்தச் சில எண்ணங்களாலும் ஓரிரண்டு செயல்களாலுமே நாம் நிறைவு பெற்றுவிடக் கூடாது. நம் விடுதலை நோக்குக்கு இவற்றை அடித்தளமாகவே கருதிக்கொள்ளல் வேண்டும். நான் அண்ணாவை இவ்வகையில் குறைத்து மதிப்பிடுவதாக எவரும் கருதிவிட வேண்டா. யானை வேட்டைக்குப் போகின்றவன் வழியில் கிடைக்கும் ஓரிரண்டு முயல்களாலும் எலிகளாலும் நிறைவடைந்து நின்றுவிடவோ, திரும்பிவிடவோ வேண்டாவென்றே வேண்டிக்கொள்கின்றேன். அண்ணாவால் நமக்குக் கிடைத்தவற்றைவிடக் கிடைக்க விருந்தன ஏராளம். ஆனால் கிடைத்தவை அவ்வளவுதான். அவர் வாழ்ந்த காலத்திற்குள் அவ்வளவுதான் இந்தத் தமிழர்களைக் கொண்டு அவர் செய்ய முடியும். உட்கோளும், உட்பகையும், உட்பூசல்களும் நிறைந்து விளங்கும் நம் தமிழினத்தின் கொள் முதல் இந்த நிலையில் அவ்வளவாகத்தான் இருக்கமுடியும். ஆனால் இதற்கு முன்னிருந்தவர்களைப்பார்க்க அண்ணா செய்தது மலையத்துணை; நாம் கொண்டுள்ள இலக்கைப் பார்க்கையில் அண்ணா ஆற்றிய பணி ஒரு கடுகளவே.

பருவத்தையும், பூசலையும், சுற்றிப் பறித்த படுகுழிகளையும் வெற்றிகொண்டு அவ் வொருதனித் தமிழ்மறவன் ஆற்றி முடித்த பணி காலத்தால் சிறிதே எனினும் ஞாலத்தின் மாணப் பெரிது என்பதை நாம் அறிவோம். அவரைச் சுற்றியிருந்த துன்பங்களையெல்லாம் தமக்குத்தாமே மென்று விழுங்கி, அவர் கட்சியாளரிடை அவர் கண்ட உட்பூசல்களை யெல்லாம் தமக்குத் தாமே செரித்து நின்று, தம் உடலும் சதையுமாய் நின்ற தமிழினத்திற்கு அவர் ஊட்டிய சாரமும் வலிவும் குறைவென்றாலும், அத்தகைய சாரமும் வலிவுங்கூட ஊட்டப் பெற்றிருக்கவில்லை யென்றால் நொடிந்து வீழும் நிலையிலிருந்த தமிழினம் இன்று மடிந்து, போயிருக்கும் என்று நினைக்கையில் அவர் செயல் மிகமிகப் பெரிய செயலே! அரிய வினைப்பாடே! இதில் எவருக்கும் ஐயமில்லை.

கட்சிக்கும், இனப் பூசல்களுக்கும், பொருளுக்கும் மருளுக்கும் ஒரு கடுகத்துணையும் சாயாமல் ஓடிக்கொண்டிருக்கும் இத்தூவலினின்று வரிவடிவெடுக்கும் இவ்வெழுத்துகள் அத்தனையும் அண்ணாவுக்கு வடிக்கும் நன்றிக் கண்ணீரால் வரையப்பெற்றவை என்பதை உண்மையாக மதிக்கும் தமிழ்நெஞ்சங்கள் என் கருத்தில் பிழைகாண முடியாது.

வாசாளாவும் ஆரவாரத்திற்கப்பால் தோன்றும் அமைதியான நிலையி னின்று நான் கூறுவதானால் அறிஞர் அண்ணா சாகவில்லை; சாகடிக் கப்பட்டார் என்றுதான் கூறுதல் வேண்டும். ஆம்! சாகடிக்கப்பட் டார். எவரால்; நம தமிழர்களால்தாம். எத்தனை எத்தனை எடுத்துரைப் பினும், எத்தனை எத்தனை உண்மையாக நடந்தாலும், செய்நன்றி கொன்று தம்மை உய்விக்க வந்த கைகளிலேயே கறைபூசுகின்ற தமி ழிரினம் இருக்கின்றதே அவ்வினத்தாலேயேதான் அவ்வினத்தின் விடு தலை மறவன சாகடிக்கப் பெற்றான். இது பொய்யன்று.

நேரிய அவன் நோக்கு நமக்காக வளைக்கப்பெற்றது. நேரிய அவன் போக்கு நமக்காகத் திசை திருப்பப் பெற்றது. நேரிய அவன் பாதை நமக்காக மாற்றியமைக்கப் பெற்றது. தமிழினம் ஒருவனைச் செய்யாமலும் இருக்கவிடாது; செய்யவும் விடாது. செய்ய முனைந்த வனை—தொடக்கத்தில் கவிழ்க்கப் பார்க்கும்; வளர்ந்துவிட்டால் தழுவப் பார்க்கும். தன் முன்னோடியின் முகத்தைத் தன்பக்கமாகவே திருப்பி வைத்துப் பார்த்துக் கொள்வதில் ஒவ்வொரு தமிழனுக்கும் தனித்த பேராவல். இந்தப் பேராவலால் சுற்றியிருந்தவர்கள் அந்த இனப் புரட்சிக்காரனுக்கு இழைத்த துயரம ஒன்றிரண்டன்று. ஒரு கோடி! அத்துயரப் புயலால்தான் அத் தமிழ்க் கப்பல் இவ்வளவு விரைவில் தலைகவிழ்ந்தது. சாக்கடலில் மூழ்கிப்போயிற்று. அதற்கு நெஞ்சு நோயன்று; நினைவு நோயே!

"ஏ! தமிழ்த்தாயே! உன்னை இறைஞ்சிக் கேட்டுக்கொள்கின்றேன். உன் பிள்ளைகளை வாழவை. உன் பிள்ளைகளுக்காக உழைப்பவரைச் சிறிது காலத்திற்காகவாகிலும் உழைக்கவிடு! இருளும் மருளும் சூழ, அறியாமைக் குழியில்விழுந்து, அடிமைச் சேற்றில் கால் புதைந்து கிடக்கும் இத்தமிழினத்தைத் 'தலை தூக்குவேன்' என்று ஒரு துரும் பன் வரினும் அவனுக்குத் தூண்போன்ற உடலைக்கொடு! ஓர் ஏழை வந்தாலும் அவனுக்கு அரசனைப்போன்ற செல்வத்தைக் கொடு! அவன் அந்த உடலையும் செல்வத்தையும் அவனுக்காக வைத்துக்கொள்ள விரும்பமாட்டான்! அவன் விரும்புவது மக்கள்! மக்கள்!! மக்கள்!!! இவ்வாறு மக்களின் முன்னேற்றத்திலேயே மூச்சை அடக்கிக்கொண்ட அக்கோமகனைப்போல், விடுதலை மறவனைப்போல் ஓராயிரம் மக்களை எங்களுக்குக் கொடு. ஒருநூறு மறவர்களையாகிலும் இவ்வேதுங் கெட்ட தமிழினத்திற்குக் கொடு. நாங்கள் உய்ந்து போகின்றோம்!

உலகில் வேறெந்த நாட்டாரும் எங்கள் நாட்டிற்காகக் கவலைப் படப் போவதில்லை. நாங்களேதாம் எங்கள் இழிவுகளைப் போக்கிக் கொள்ளுதல் வேண்டும். எங்கள் கைகள்தாம் எங்களைச் சமைத்துக் கொள்ளுதல் வேண்டும். ஆயிரமாயிரமாண்டுகளாக விலக்கவொண்ணாக் குமுகாய இழிவுக் குப்பைகள் எங்களிடையே மண்டிக்கிடக்கின்றன. அவற்றை நாங்களேதாம் வாரி அப்புறப்படுத்த வேண்டும். ஆரியப் பார்ப்பனர் விளைவித்த பூசல்களினின்று நாங்கள் எவராலும் விடுவிக்கப்பெறப் போவதில்லை. எங்களின் முன்னேற்றங்கள்தாம் அவற்றைக் கட்டவிழ்க்க வேண்டும். அவற்றினின்றும் நாங்கள் காக்கப்பெற வேண்டும். அன்னையே! இவ்வத்தனை வினைப்பாட்டிற்கும் எங்களுக்குப் போதிய வல்லமை கொடு! இதுவே எங்கள் இனத்தின் தலையிழந்து நிற்கும் எங்களுக்கு நீ கொடுக்கவேண்டிய ஆறுதல்" (அடுத்த ஆசிரியவுரை புதிதாக அமைக்கவிருக்கும் தமிழக அமைச்சரவைக்குத் தென்மொழி விடுக்கும் வேண்டுகோளாக அமையும்)

-பெருஞ்சித்திரன்

"தென்மொழி" அன்பர்களுக்கு

தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களின் மறைவு குறித்து இரண்டு நாட்கள் அச்சகத்திற்கும் அலுவலகத்திற்கும் விடுமுறை அளிக்கப் பெற்றதால், இம்மாதத் தென்மொழி காலங் கடந்து வருகிறது. அன்பர்கள் பொறுத்தருள்வராக.

ஆசிரியர்,
தென்மொழி.

---

0 உங்கள் ஊரில் உலகத் தமிழ்க் கழகம் தோற்றுவிக்கப் பெற்றதா?

0 இதுவரை இல்லையென்றால் உடனே தோற்றுவிக்க அனைத்து ஏற்பாடுகளையும் இன்றே மேற்கொள்ளுங்கள்.

0 எல்லாவற்றிற்கும் உங்கள் ஊர் மாவட்ட அமைப்பாளருடனோ பொதுச் செயலாளருடனோ உடனே தொடர்பு கொள்ளுங்கள்.

0 தனித்தமிழ்க்கும் தமிழர் விடுதலையுணர்வுக்கும் அரணாக நின்று இயங்குவது உலகத் தமிழ்க்கழகமே!



மக்களவை

வானொலியில் இந்தி

தமிழகத்தில் இந்தியைத் திணிக்கும் முயற்றியில் நடுவணரசு சூடு பட்ட புலியைப்போல் இருக்கின்றதென்பது தற்பொழுது வானொலியில் ஆங்கிலச் செய்திக்கு மாறாக இந்தியில் செய்தியை ஒலிபரப்பி வருவதிலிருந்து நமக்குத் தெற்றென விளங்குகிறது. தில்லியரசின் வெறியாட்டங்களுக்கு ஒத்தூதும் காலம் பக்தவத்சலம் பரம்பரையோடு சுட்டெரிக்கப்பட்டு உருத்தெரியாமல் போய்விட்டதென்பதை தில்லியரசின் இந்தி வெறியர்கள் உணரவேண்டும்.

எனவே தில்லியரசு தமிழகத்தில் இந்தியைப் புகுத்தும் முயற்சியைக் கைகழுவிவிட வேண்டும். வானொலியில் ஒலி பரப்பப்படும் இந்திச் செய்தி அறவே நீக்கப்பட வேண்டும்.

சி. இராசு, சென்னை-14.

புதுவையில் ஆரிய வடவர்

இனிய ஐயா அவர்கட்கு.

வணக்கம். புதுவை தன்வந்திரி நகரில் (கோரிமேடு) நடுவணரசின் உதவியுடன் அண்மையில் "நடுவண் பள்ளி" (Central School) என்னும் பெயரில் ஒரு பள்ளிக்கூடம் நிறுவப்பெற்றுள்ளது. ஆண்டு உறையும் வட தென்மாநிலங்களைச் சார்ந்த தமிழரல்லாத பிறமக்களின் நலனை முன்னிட்டு இப்பள்ளி நிறுவப்பெற்றது என்று கூறுகின்றனர். இப்பள்ளியில் மும்மொழித் திட்டம் வடவாரியரின் உள்ளார்ந்த எண்ணத்தை வெளிப்படுத்தும் வகையில் செம்மையாகக் கையாளப் பெறுகின்றது. இந்தப் பள்ளியில் கற்கும் மாணவர்க்கு இந்தி, சமற்கிருதம், ஆங்கிலம் என்னும் மூன்று மொழிகளும் மும்மொழித் திட்டத்தின் அடிப்படையில் கற்பிக்கப்பெறுகின்றன. இந்தியும் சமற்கிருதமும் மும்மொழித் திட்டத்தால் நுழைகின்ற இழிவைத் துடைக்க தமிழக அரசு இருமொழித் திட்டம் வகுத்தது; இந்திக்கும் சமற்கிருதத்திற்கும் 'கழுத்தடி' கொடுத்தனுப்பியது. பின்னர், தமிழகக் கல்வித் திட்டமே புதுவைக்கும் ஏற்புடையதாகும் என்ற தவிர்க்கவியலாச் சூழ்நிலையில், வடவனும் ஆரியனும் தம்தம் மொழிகளை எத்துணைக் கரவோடும் துணிவோடும் தில்லிக் கூலியைப் பெற்றுப் புதுவை மண்

னில் ஊன்றியுள்ளனர் என்பதை அறிகையில் தூங்குகின்ற தமிழ னின் மிடிமைக்கும் கெடுமைக்கும் இந்நிலத் துண்டத்துள் வேறெங் கும் ஒப்புமை காண்டல் அரிதே என்ற அயர்ச்சி ஏற்படுகின்றது. தமிழ் மண்ணின் கரையாம் புதுவையில் தமிழுக்கு இடமில்லாமல் ஒரு பள்ளி! இன்றியமையாத் தேவை இருப்பின், அங்குப் படிக்கின்ற மாணவர்க்கு ஆங்கிலத்தோடு அவரவர்தம் தாய்மொழியையும் பயிற்றுவிக்க ஏற்பாடு செய்வதே தக்கது; அதனை விடுத்து, புறக் கடை வழியாக இந்தியையும் சமற்கிருதத்தையும் புதுவைக்குள் புக விட்ட நடுவணரசின் சூழ்ச்சியைப் புதுவை மாணவர் புரிந்துகொள்ளு தல் வேண்டும். புதுவை மாணவர் இப்பள்ளியின்மீது ஒரு கண் வைத்து இவ்விழிவினை மாற்றுதற்கு முயற்சி மேற்கொள்ளல் வேண் டும்.

" கெடல் எங்கே தமிழின் நலம்?
அங்கெல்லாம் தலையிட்டுக்
கிளர்ச்சி செய்க!" —பாவேந்தர்.

த. வளங்கோ, புதுவை மாவட்ட அமைப்பாளர், உ. த. க.

திருவள்ளுவர் முனிவரா?

தென்மொழி மடங்கல் இதழில் மக்களவைப் பகுதியில் திருவள்ளு வர் 'முனிவரா' என்பதும், அவர் 'முத்தி' அடைந்ததாகக் கூறுவதும் குறும்புத்தனமான செயலென்று குறிப்பிட்டுள்ளார். ஒருவர் குறும் பென்று கூறுவது அன்னாரின் தமிழ்ச்சமய அறிவு வெறுமை (வெண்மை)யைக் காட்டுவதாக உள்ளது.

அன்னார் கூறுவது போன்று 'முனிவர்' என்னும் சொல் உரோ மன்–கத்தோலிக்க மூலம் கொண்டதன்று; அது 'முல்' என்னும் தூய தென்சொல் மூலம் கொண்டதே. இதனைப் பாவாணர் நூல்களைப் படித்துத்தெரிந்துகொள்ளுமின். [முல்-முனி(முனை-முனைவு-முனைவன்) முனிவு-முனிவன்.] எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் அந்த ணரே முனிவர். அகப்புறப் பற்றுகளாம் யான் எனது என்னும் செருக் கறுத்து உயிர்களின் நலம் நாடும் சான்றோரே முனிவராவார் என்ப தைத துறவறவியலில் விளக்கியுள்ளார் பெருநாவலர். எனவே 'முனி வர்' தமிழ்ச்சொல்லே ஆம்.

பண்டைத் தமிழர் கொண்ட மாண்பெருங் கொள்கைநெறி பற் றித்தான் ஒண்டமிழ்ப் பெருநூலாம் திருக்குறளை இயற்றியருளினார். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பெருங் கொள்கைகள்

நற்றமிழரதே. வீடுபேற்றின் வாயில்நடைவழியாக அறத்துப்பாலையும், இப்புமை வகையாகக் காமத்துப்பாலையும் பாடியுள்ளார் திருவள்ளுவர்.

"பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும் செம்பொருள் காண்ப(து) அறிவு" என்னுங் குறள் உலக வாழ்வின் முடிநிலைப் பயனும் வீடு பெறுதலையே குறிப்பதாம். ஆகலின் வீடு பேற்றுக் கொள்கை தமிழ்க் கொள்கையே யாகுமன்றி அரபிய, சிந்து மூலத்தையுடைய கடவுள் நம்பிக்கைக் கொள்கைக்குரியதன்று.

'முத்திநெறி அறியாத மூர்க்கரொடு' எனத் தொடங்கும் அச்சோப் பதிகத் திருவாசகத்தில் மாணிக்கவாசகப் பெருந்தகையார் 'முத்தி நெறி' என்று மொழிந்தருளியிருப்பது 'யான எனது' என்னும் அகப் புறப்பற்றுவிட்டு, சிறப்பென்னும் செம்பொருளைப் பெறுவதாய வீட்டு நெறியையே குறிக்கிறது. வானோர்க்கு உயர்ந்த உலகு பெறும் முற்றிய நிலையே முத்தி. எனவே வாழ்வாங்கு வாழ்ந்த திருவள்ளுவ முனிவர் முத்தி அடைந்தார் என்பது அவர்தம் குறள்நூலில் நன்குவிளங்குகின்றதன்றோ!

அண்ட பிண்டங்களாம் உலகு உடல். இயற்கைநெறி பற்றியும், தமிழ்ச்சொற் பொருள் நோக்கியும், தம்காலத்து நிலை நோக்கியும் கடவுள், துறக்கம் என்னும் சொற்களை நேரடியாகப் பயன்படுத்தவில்லை போலும். இருப்பினும் துறவறவியலும், 'துறவு' அதிகாரமும், கடவுள் 'வாழ்த்து' அதிகாரமும் அச் சொற்களைப் பயன்படுத்தியது போலக் காட்டுகின்றன அன்றோ?

திருவள்ளுவர் தம்காலத்து நிலவிவந்த ஆரியக் கொள்கைகளை அகற்றித் தமிழர் பண்பாட்டைக் கிளர்ந்தெழச் செய்தவர். எனவே அவர் தமிழரின் உறுதியான அறநெறிக் கொள்கைகளையே பின்பற்றியிருப்பரல்லது சிந்து—அரபிய மூலக் கொள்கையைப் பின்பற்றி நூலெழுதியிருக்கமாட்டார் என்று மலைமேல் ஏறிநின்று கூறலாம். முனிவர், துறக்கம் என்பன தவறான குறியீடுகள் அல்ல என்பதும், திருவள்ளுவர் முனிவரே யென்பதும், அவர் முத்தியடைந்ததாகக் கூறுவதில் பிழையில்லை என்பதும் விளக்கமுறுதலை அறியலாம்.

இனியேனும் தமிழரின் தனிப்பெருங் கொள்கைகளைத் தமிழரல்லாரின் கொள்கைகள் என எழுதவோ, பேசவோ கனவிலும் நினைக்க வேண்டாவெனக் கேட்டு முடிக்கிறேன்.

—அருணன், தலைமையாசிரியர், குப்பனூர், அவிநாசி.

இலக்கியம்

நூறாசிரியம்

துரை-மாணிக்கம்

பாட்டு. கக.

வானினு முயர்க நெஞ்சே; வானத்து
மீனினும் படர்கதன் நினைவே; மின்னினும்
ஆன்றொளி சுடர்கநல் அறிவே; அறிவதும்
வாரியின் மிகுகவன் வலியே; வளியினும்
தான்றிற முறுக; தணலினுந் தெறுக;
தண்ணினுந் தண்ணுக; மண்ணினுந் திண்ணுக;
நுண்ணிய அணுவினும் நுண்ணிய தாகுக!
ஆவியும் மெய்யு மாகி
மாவினும் புள்ளினும் மயங்கியோர் பாலே!

பொழிப்பு:

சேய்த்தோர்க்கு அணிமையும் அணித்தோர்க்குச் சேய்மையுமாய்ப் புலப்படும் வானைவிட உயர்ந்து செல்க, நெஞ்சமே. அவ்வானத்துள்ள மீன்கூட்டத்தைவிடப் படர்ந்து பட்டு விளங்குவதாகுக, அதினின் றெழும் நினைவுகள்! மின்னலைவிட மிகுந்து சுடர் விடுவதாகுக அறிவு. அவ்வறிவின் வலிமை மழைமுகிலைவிட மிகுவதாகட்டும்; காற்றைவிடத் திறம் பெறுவதாகட்டும்! தீயைவிடச் சூடு மிகுவதாகட்டும்; குளிர்ந்த நீரைவிடக் குளிர்வதாகட்டும்; நிலத்தைவிட இறுகலுறட்டும்; நுண்மை யெய்திய அணுவைவிட நுண்மை உடையதாகட்டும்; உயிரும் உடலுமட்டுமே ஆகியிருந்து உள்ளம் விளக்க முறாமல் விலங்குபோலும் பறவை போலும் பிறர் மயக்கமுற நிற்பவரிடத்தே!

விரிப்பு:

இப்பாடல் புறத்துறையைச் சார்ந்ததாகும்.

உயிரும் உடலும் பொதிந்த உருவெளித் தோற்றத்தால் மக்களைப்போலும் உள்ளத்தால் விலங்கைப்போலும் பறவையைப் போலும் பிறர் தோற்றங்கண்டு ஒத்தஇனம் என்று விரும்பவும், உள்ளங்கண்டு வேறினமோ என ஐயுறவும் மயங்கவும் இடனுகவுள்ளவரிடத்து நம் நெஞ்சம் எவ்வகையில் திறமுறல் வேண்டும் என்பதாகக் கூறியதாகு மிப்பாட்டு.

இவ்வுலகத்துள்ள மாந்தர் யாவரும் ஒருரு ஒரு நிறையாகத் தோற்றமுற்றிருப்பினும் அவர் தம்மை வேறுபடுத்திக் கூறுதல் குற்றமன்றோ எனில் கூறுதும். மாந்தர் யாவரும் நிலத்து விழுந்த நீர்போல் முந்தை தூய்மையுற்றுப் பின்றை இடத்தானும் வினையானும் வேறுபடப்பட மனம் திரிதலும், மனந் திரியத் திரியப்பின்னையும் இயக்கத்தான் வேறுபடுதலும் உலகவியற்கை. இவ் விளங்கல் வேறுபாடு அறிவான் சமநிலைப்பட்டுப் பொருந்தத் தோன்றுதலும், அது கூடாவிடத்தே திரிந்து மாறுதலும் எவராலும் மாற்றவியலாத இயற்கைக் கூறுபாடுகளாம்.

நீர் என்பது பொதுவெனினும், சிறப்புக் கருதுமிடத்து, அது ஊற்றுநீர் என்றும் ஆற்றுநீர் என்றும், இன்னும் பலவாறும் இடத்தாலும், உப்புநீரென்றும், வெப்புநீரென்றும், இன்னும் பலவாறும் வினையானும், இன்னும் உள்வினை கருதுகையில் அதன தன் உட்கூறு பலவாயும் வேறுபட்டு விளங்குதல் காண்கின்றோமா அல்லமா? ஐம்பூதப்பொருளில் ஒன்றாய அந்நீரே இவ்வாறு பல்வேறுதிறத்ததாக விளங்குகையில், ஐம்பூதங்களும் தத்தம்முள் அளவினும் திறத்தினும் பல்லாயிரங்கோடி வகையான கூறுபாடுகளில் ஒன்றியும் ஒன்ருமலும், இன்னும் அவ்வவற்றின் திறங்களுக்கேற்பக்கோள்களாலும் உடுக்களாலும் மனம் அறிவு வெளிகளினுலும் திரிக்கப்பெற்றும் ஆளப்பெற்றும் விளங்கித் தோன்றும் இவ்வுயிரினங்களும், அவற்றினும் தேறி விளங்கிய இம் மாந்த வினமும் எத்துணை எத்துணை வகையால் வேறுபட்டன என்பதைப் பூதநூலும், வேதியல்நூலும், கோணூலும், மனநூலும், அறிவு நூலும், உயிர்நூலும் விளங்கக் கற்றவர்கள் தெள்ளிதின் உணர்வர். உணரவே அவர் பொருட்டாக எழுந்த திப் பாட்டு என்க.

இனி மாந்தப் போலியர் உளரெனினும் அவர் மாவினும் புள்ளினும் மயங்கித் தோன்றுதல் எங்ஙனமெனின், கூறுதும்.

உயிர் விளக்கக் கூறுபாட்டான் உலகின்கண் காணப் பெறும் இவ்வுயிர்கள் கூர்தலற ஒழுங்கின் ஒன்றினின்று ஒன்று தேறியும் திரிந்தும், பெருகியும் விளங்குதல் வெள்ளிடைமலை. அவ்வாறு தேறித் திரிதலுறுங் காலத்து முதற்கண் உடல் திரிதலும் அத்திரிபுநிலைக்கேற்ப உள்ளந் திரிதலும் உயிர்நூல் கூறும் உண்மையாகும். இனி உள்ளத்திரிபுக் கேற்ப உடல் மேன்மேலும் திரிதலுறும். அதன்மேல் உள்ளமும் மேன்மேலும் விளங்கித் தோன்றும். இவ்வாறு உடலும் உள்ளமும் முன்னது தோன்றப் பின்னது விளங்கியும், பின்னது விளங்க முன்னது தோன்றியும் ஒத்த நடையிட்டு மீமிசைக் கூறுபாடுகள் எய்தும் என்க. விலங்கினின்றும் புள்ளினின்றும் திரிந்து தோன்றிய மாந்தன் மேற்கொண்டு உள்ள விளக்கத்திற் குரியவனாகின்றான். அவ்வுள்ள விளக்கம் முற்றும் நடைபெறா விடத்து மாந்தவுடலும் விலங்குள்ளமும் பெற்றோனாக விளங்குகின்றான். அவன் அவ்விலங்குள்ளத்தை முற்றும் விட்டு வெளியேறும்வரை, அவ் விலங்குக்கும் பறவைக்கும் ஒப்பவே நடந்து வினை மேவுகின்றான்.

பெண்டிர் யாவருமே ஆடவர் மருவுதற் கேற்றவராக விருப்பினும், அப்பெண்டிருள் ஒருத்தியையே தான் மருவுதற் கேற்றாளாகக் கொள்வது உள்ள வளர்ச்சியின் கூறுபாடே. விலங்கின நிலையினின்று முற்றும் மாறுபடா உள்ளங்கொண்டோனுக்கோ, எல்லாப் பெண்டிரும் மருவுதற் கேற்றவர் என்ற எண்ணமே கால் கொள்ளும். உள்ளம் மேலூர்ந்து சிறந்தோனுக்கோ, தான் மருவுதற்குரிய பெண் தவிரப் பிறரெல்லாரும் தாயும் தமக்கையும் தங்கையுமாகவே தோன்றுவர். ஒழுக்கநிலையான் காணப்பெறும் இவ் வேறுபாடும், உண்ணுதல், உறங்குதல், காத்தல், இணைதல் முதலிய வினைநிலையான் கருதப்பெறும். பிற வேறுபாடுகளும் கருதியே மாவினும் புள்ளினும் மயங்கியோர் என்று கூறப்பெற்றது.

நெஞ்சே! அத்திறத்தோரிடத்து வானினும் உயர்ந்துபோதல் முதலாய திறமைகளை வருவித்துக்கொண்டு அவரிடத்தினின்று தப்பி உய்க என்பது பாட்டு.

வானினும் உயர்க: செய்த்தோர்க்கு அணிமையும், அணித்தோர்க்குச் சேய்மையுமாய்ப் புலப்படும் வானைவிட உயர்ந்துசெல்.

தொலைவினின்று காண்போர்க்கு மிகவும் நெருக்கமுற்றதுபோல் தோன்றினும், நெருங்கினார்க்குத் தொலைவிலுள்ளதாகத் தெரிவது வானம். அதுபோல், தொலைவினின்று மாந்தற் றன்மை குன்றியோர்க்கு நாம் நெருக்கமுற்றவர்போல் தோன்றினாலும், நெருங்கிப் பார்க்குமிடத்து அவர்நிலைக்கு எட்டாதவாறு நம் நெஞ்சமும் வினையும் சேய்மையனவாகப் புலப்படுத்தல் வேண்டும் என்றவாறு. இனி வான்போலும் உயர்க என்னாது, வானைவிட உயர்க என்று மேலும் உயர்ச்சி காட்டியது, மாவினும் புள்ளினும் மயங்கியோரை இன்னும் கீழ்மையினால் தாழ்த்துதல் வேண்டி என்க.

நெஞ்சின் விளக்கம் முன்னொரு பாட்டில் கூறப்பெற்றது.

வானத்து மீனினும் படர்கதன் நினைவே: வானத்தே மீனினம் பகலிற் கரந்திருந்து இரவிற் படர்வது போல், அவர்க்கு ஆரவாரத்தே புலப்படா தின்று, அமைதியிற் புலப்படுத்துதல் வேண்டும் என்க. பகல் ஆரவாரக்காலமும் இரவு அமைதியின் காலமுமாம் என்றறிக. இனி, வெற்று வானம்போல் தோன்றுமிடத்து உற்று நோக்கிய வழி மீனினம் படர்ந்திருத்தல் புலப்படுதல் போல், நுணுகி நோக்கினார்க்கன்றி நுண்ணுணர்க்கற்ற மாவினும் புள்ளினும் மயங்கியோர்க்கு நம் திறம் புலப்படுதல் தேவையன்று என்பதறிக.

வேண்டா விடத்து நம் நுட்பம் வெளிப்படுத்தப் பெறுவதொன்றன்று என்க.

'நினைவு' என்னும் சொற்பொருள் 'நெஞ்சு நிலனாக நினைவு வித்தாக' என்ற பாட்டில் விளக்கப்பெற்றது, நினைவுமீன் படர்தலுக்கு வான்நெஞ்சம் புலப்படக் கூறியது காண்க.

மின்னினும் ஆன்றொளி சுடர்கநல் அறிவே: மின்னித் தோன்றும் ஒளிப்போலும், ஆனால் விளங்கியும் சுடர்தல் வேண்டும் என்பது. மின்னித் தோன்றுதலால் மின்னலென்றும் மீன் என்றும் பெயர் பெற்றன. ஒளித்திறன் அவை போன்றதாம் என்னினும் ஆன்று சுடர்தல் வேண்டும் என்று வேண்டப் பெற்றது. சடுத்துப் பாய்ச்சலும், ஒளி மண்டிச் சுடர்தலும் பெற்ற அறிவு, மாவினும் புள்ளிலும் மயங்கியோர்க்கு ஒளி கொளுத்தலும், பயன் தருதலும் ஆகிய வினைகள் மேற்கொள்ளுதல் வேண்டுமன்றோ? எனவே சுடர்க அறிவு எனலாயிற்று. பயன் நல்குதலால் நல் அறிவு எனப்பெற்றது.

அறிவதும் வாரியின் மிகுகவன் வலி' அவ்வறிவும் கடல் போலும் மழைமுகிற் போலும் வன்வலி மிகுவதாகுக என்றவாறு.

நீரை வாரலால் கடலும் முகிலும் வாரி எனப்பட்டன.

நீர் நிலத்தளவில் வலிமிக்க பொருள், ஆக்கலும் அழித்தலும் அதனிடத்து உளவாகலின். தேக்கமும் படர்வும் அதன் வலித்திறன் களாகும். தேக்கமுற்றது கடலும், படர்வுற்றது முகிலும் ஆகலான் இருபொருளொருசொல் பெய்யப்பெற்றது.; வாங்கலும் வழங்குதலும் அவ்விரண்டின் வினைகள். இவ்விரண்டானும் வலி மிகுதல், தம்நிலை தப்புதற்கும் மாவினும் புள்ளினும் மயங்கியோர் நிலை வெல்வதற்கும் வேண்டி என்க. அறிவற்றன வாங்கி, அறிவாயின வழங்குதலும் உய்த்துணர்க.

வளியினும் தான்திறமுறுக: காற்றினும் திறமுற்று விளங்குக. கால்வதால் காற்றும், வலிதலால் வளியும் என்க. கால் நீளுதல். வலி–வளி–அடர்த்துப் பெருகுதல், வளைதல், சுழலுதல்' வாருதல் ஆய வலிந்த வினைபற்றியிருத்தலான் வளி என்றாயிற்று. இத்திறன் கள் முற்றும் பகைவெல்லுந் திறமாயின பற்றி அவை மிகுதல் வேண்டும் எனலானது.

தணலினும் தெறுக: தீயினும் பற்றியழிக்க. தழல்–தணல். பற்றல்,படர்தல், பெருகுதல், ஆட்கொள்ளுதல் ஆயவினைகள் தீயினுக்கு உரியவாகலின் தீ தழல் எனப்பெற்றது.

தள்–தழ்–தழ–தழல்–; தள்–தழ்–தழ–தழை. தீ தளதளவென்று எரிந்தது. தளதள எனும் அடுக்கு தணதண வென்றும் வரும்.

தண்ணினும் தண்ணுக: குளிர்ச்சியினும் குளிர்ச்சியுறுக. அறிவு கனன்று எழுந்தவிடத்து விளங்கியும் தண்ணிய விடத்து அடங்கியும் தோன்றும். கனன்றது அறிவென்றும், தணந்தது அன் பென்றும் பெயர்பெறும். அறிவு வெப்பமும், அன்பு தட்பமும் வாய்ந் தது. அறிவு அடங்கி அன்பாகி ஆக்கமும், அன்பு எழுச்சியுற்று அழிவும் சேர்க்கும்,

அறிவான் தெறலும், அன்பான் பொறலும் செய்து மாவினும் புள்ளினும் மயங்கியோரிடத்து விறல்பெற வேண்டும் என்பதாம் என்க.

மண்ணினும் திண்ணுக: நிலம்போலும் திண்மையுடையதாகுக. மண்–பொருந்துதல், முன்பொருபாட்டான் விளக்கப் பெற்றது. பூதப் பொருள்கள் நான்கு மேவிய ஐந்தாம் பூதம் மண். மண் மேலும் மேலும் இறுகலுறுவ தொன்குகலின் மண்போலும் அதனினும் மிக

வும் திண்ணுக வென்றது. மாவினும் புள்ளினும் மயங்கியோர் நம்மை அசைப்பவும் திசைப்பவும் செய்வர் ஆகையால் அவர்வழித் தப்புவான் வேண்டி மண்ணினும் திண்ணுக என வேண்டியதாயிற்று.

நுண்ணிய அணுவினும் நுண்ணிய தாகுக: கரந்துறைதலும் கருவாயுறைதலும் அணு. நுண்மை எய்தியவிடத்துப் பருமை பற்று தாம். எனவே நுண்ணியதாகுக எனப்பெற்றது.

வான்போலும் உயர் நெஞ்சும், மீன்போலும் படர் நினைவும் மின் போலும் சுடர் அறிவும், வாரிபோலும் வன்வலியும், வளிபோலும் வெல்திறலும், தணல்போலும் கொல்திறலும், தண்போலும் குளிர் ஒடுக்கும், மண்போலும் திண்பாடும், அணுப்போலும் நுண்காப்பும் கொண்டு, ஆவியும் மெய்யுமாய் ஆகிநின்ற மாந்தர் எனும் மாவி னும் புள்ளினும் மயங்குற நிற்பாரிடத்து விளங்குக என்றவாறு.

இப்பாட்டும் புறத்திணையும் பொருண்மொழிக் காஞ்சியென் துறையுமாகும்.

சேலம் நகரில் சீர்திருத்தத் திருமணம்.

நிகழும் திருவள்ளுவர் 2000 ஆண்டு, சுறவத் திங்கள் க0-ஆம் நாள் (23—1—69) வியாழன் அன்று காலை 10-30 மணி யளவில் சேலம் நகராட்சிக் கல்லூரி முன்னாள் வரலாற்றுப் பேராசிரியரும், உல கத் தமிழ்க் கழகச் செயற்குழு உறுப்பினருமாகிய திரு. வை. சொக்கப்பா, க. மு., ப. உ. அவர்களின் திருமகள் கலைச்செல்விக்கும், சீர்காழி வட்ட ஆட்சியாளர் திரு. மூத்தையா அவர்களின் உடன்பிறந் தார் திரு. நடராசனுக்கும், திராவிடர் கழகத் தலைவர் பெரியார். ஈ வே. இராமசாமி அவர்கள் தலைமையில், சேலம் அம்மாப்பேட்டை திருமண மண்டபத்தில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது.

விழாவிற் கலந்துகொண்டு. "தென்மொழி" ஆசிரியர் பாவலர் திரு. பெருஞ்சித்திரனார், திரு. சோமசுந்தரம் பா. ம. உ. (எம். பி.), காட்டூர் திரு. இராமையா, மற்றும் பலர் சொற்பொழிவாற்றினார்கள். தலைவர் பெரியார் மணமக்களுக்கு அறிவுரை வழங்கினார். பேராசிரியர் திரு. சொக்கப்பா விழாவிற்கு வந்திருந்த அனைவர்க்கும் நன்றி கூறினார்.

செய்தியும் அறிக்கையும்

செய்தி எண்: உ. த. க / 3 / 2000

1. தேவகோட்டை-கிளைக்கழக அமைப்புக்கூட்டம்

உ. த. க. சார்பில், திருவாடானை வட்டம் (முகவை. மா. வ), தேவகோட்டைக் கிளைக்கழகத்தின் அமைப்புக் கூட்டம் சிலை ௨௨ (5-1-68) அன்று பிற்பகல் 2-மணிக்கு, மாவட்டத் தலைவர் திரு. மு. தமிழ்க்குடிமகன் க. மு; அறி. இ. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு. அ. கந்தசாமி, இ. க; ப. இ. அவர்கள் வரவேற்புரையாற்றினார். புலவர் திரு. தமிழ்வளவன் அவர்களும், திரு. பறம்பை அறிவன் அவர்களும் கழக நோக்கங்கள் பற்றி உரையாற்றினார்கள். பின்னர் தேவகோட்டை கிளைக்குத் திரு. வீரப்பன் அவர்கள் தலைவராகவும், திருவாட்டி. தாமரை (கமலம்) செல்லத்துரை அவர்கள் செயலராகவும், திரு. முருகன் அவர்கள், பொருளராகவும் ஒருமனமாகத் தேர்ந்தெடுக்கப்பெற்றனர்.

2. ஆலத்தம்பாடி-தஞ்சை.

உ. த. கழகக் கிளையாகப் பதிவுசெய்து கொண்ட தஞ்சை முத்தமிழ்க்கலை மன்றத்தின் முதலாண்டு நிறைவுவிழா சுறவம் ௩ (16—1—69) அன்று கொண்டாடப் பெற்றது. விழாவிற்குத் திரு. கோ. த அரங்கநாதனார் தலைமை யேற்றார். புலவர் திரு. வி. பொ. பழனிவேலனார், கீ. க. தே. (தஞ்சை உ. த. க. மாவட்ட அமைப்பாளர்) "திருவள்ளுவர் காலம்" என்பது பற்றியும், புலவர் திரு. உதயை மு. வீரையன் அவர்கள் "இலக்கிய இன்பம்" என்பது பற்றியும், திரு. மா. சோமநாதன், க. இ; ப. இ. அவர்கள் "தமிழரின் இன்றைய கடமை" என்பது பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

3. பெரும்பகல்லா-நீலமலை.

உ. த. கழகக் கிளையான பெரும்பகல்லா திருவள்ளுவர் மன்றம் சிலை ௧௧ (25—12—68)-இல் தன் தொடக்க விழாவை நடத்திற்று.

அது பொழுது திரு. க. காசி அவர்கள் தலைமை யேற்றார். திருவாளர்கள். க. நாராயணன், நா. இளமாறன், இளங்குருவன், கா.ம தேவன், முருகேசன் ஆகியோர் கழகம் தொடங்கவேண்டிய இன்றியமையாமை பற்றியும், அது செய்யவிருக்கும் பணிகள் பற்றியும் விரிவாகப் பேசினர். திரு. க. ம. தேவன் தலைவராகவும், திரு. து. சொக்கலிங்கம் செயலாளராகவும், திரு. க. நாராயணன் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பெற்றனர்.

4. திருவாடானை திருவள்ளுவர் விழா.

திருவாடானை (முகவை) கிளைக்கழகச் சார்பில் சிலை உஅ (1-1-69) அன்று திருவள்ளுவர் விழா கொண்டாடப் பெற்றது. புலவர் திரு. தமிழ்வளவன் வரவேற்புரை கூறினார். திரு. தமிழரசன் அவர்கள் தலைமை தாங்கினார். திருவாளர்கள். அரசகோபாலன், அறி. இ; ப. இ; பறம்பை அறிவன்; மு. தமிழ்க்குடிமகன் க. மு., அறி. இ. (உ.த.க. முகவை மாவட்டத் தலைவர்) ஆகியோர் சொற்பொழிவாற்றினர். திரு. தென்னவன் அவர்கள் கிளைக்கழகத் தலைவராகவும், புலவர் திரு. தமிழ்வளவன் அவர்கள் செயலராகவும், திரு, தமிழரசன் அவர்கள் பொருளராகவும் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். திரு கூத்தரசன் நன்றிகூறினார்'

5. நத்தம்-(வடவார்க்காடு) கிளைக்கழகம்.

வ. ஆ. நத்தம் என்ற ஊரில் சிலை உச (4—1—69)-ஆம் நாள் உ. த. க. கிளை ஒன்று தொடங்கப்பெற்றது. அமைப்புக் கூட்டத்தில் வடவார்க்காடு மாவட்டத் தலைவர், புலவர் திரு. ந அ அண்ணாமலை அவர்கள் 'கழக நோக்கம்' பற்றியும், புலவர். திரு. இலக்குவன் அவர்கள் 'தமிழின் தொன்மையும் 'தூய்மையும்' என்பது பற்றியும், புலவர் விநாயகமூர்த்தி அவர்கள் 'கழகம் செயற்பட வேண்டிய முறைகள்' பற்றியும் விரிவுரையாற்றினர். புலவர் திரு. அ. வையாபுரி கிளைக்கழகத் தலைவராகவும், திரு. ஆ. கிருட்டிணன் அவர்கள் செயலராகவும், திரு. அ. காசியரசன் பொருளராகவும் தேர்ந்தெடுக்கப்பெற்றனர்.

6. தரங்கை-பொறையாறு கிளைக்கழகம்.

தஞ்சை மாவட்டம் தரங்கை-பொறையாறு உ. த. க. கிளைக்கழகம் சுறவம் க (14—1—69) அன்று தொடங்கப் பெற்றது. புலவர் திரு. சொ. முத்தையனார் க. மு. அவர்கள் கிளைக்கழகத் தலைவராகவும், திரு. ச. பன்னீர்ச்செல்வன் அவர்கள் செயலராகவும், திரு. க. தில்லை கோவிந்தன் அவர்கள் பொருளராகவும் தேர்வுற்றனர்.

7- திருக்காட்டுப்பள்ளி கிளைக்கழகம்.

தஞ்சை மா. வ. திருக்காட்டுப்பள்ளியில் சிலை உ௫ (8-1-69)ஆம் பக்கல் உ. த. க. கிளையின் தொடக்க விழாவும், கழகத்தின் சார்பில் பொங்கல் விழாவும், திருவள்ளுவர் ஈராயிரமாண்டு விழாவும் கொண் டாடப்பெற்றன. தொடக்கக் கூட்டத்திற்குத் திரு. க. பொன்னம்பலம் அவர்களும், விழாக்கூட்டத்திற்குப் புலவர் திரு. சின்ன. இராமச்சந்தி ரன் அவர்களும் தலைமை தாங்கினர். வரவேற்புரையைத் திரு. சாமி. தங்கமணியும், தமிழ்த்தாய் வாழ்த்தை திரு. சி. அறிவுறுவோன் அவர் களும் நிகழ்த்த, திருவாளர்கள், காவிரிக் கயலன், க பொன்னம்பலம், ந. பொன்னுராமன், சாமி. தங்கமணி, சி, அறிவுறுவோன், இரா. சுந் திரமூர்த்தி, சி. அரசப்பன், பெ. மணியரசன் ஆகியோர் உரையாற்றி னர். திரு. கரு. அரங்கராசன் நன்றி கூறினர். பின்னர் இசை நிகழ்ச்சி நடந்தது. கூட்டத்தில் வணிகப் பெருமக்கட்குத் தனித்தமிழிலேயே விளம்பரம் செய்ய வேண்டுமென்னும் வேண்டுகோள் விடுக்கப்பெற் றது. பொதுமக்கள் தங்கள் மக்கட்கு நற்றமிழ்ப் பெயர்களையே இட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பெற்றது.

8. பாம்பூர் (முகவை) கிளைக்கழகம்

முகவை மா, வ பறம்புக்குடி வட்டத்தைச் சேர்ந்த பாம்பூரில் சிலை உகூ (12—1—69)-ஆம் பக்கல் உ. த. க. கிளைக்கழகம் ஒன்று தொடங்கப் பெற்றது. முகவை மாவட்ட அமைப்பாளர் திரு. மு. தமிழ்க்குடிமகன் க. மு அவர்கள் தலைமை தாங்கினர். புலவர் சாமி ஐயா வரவேற்புரை யாற்றினர். திரு. பறம்பை அறிவன் கழக நெறி முறைகளை விளக்கினர். பின்னர் திரு. த. முத்துசாமி க. இ. தலைவரா கவும், திரு. சேதுராசாராம் செயலாளராகவும், திரு. அ. சிவராமன் பொருளாளராகவும் ஒருமனமாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். செயலர் நன்றிகூற, கூட்டம் இனிது முடிந்தது.

9- பாண்டுகுடி-கிளைக்கழகம்

முகவை மா. வ. பாண்டுகுடியில் உ. த. க. கிளையின் அமைப்புக் கூட்டம் சுறவம் ௬ (19—1—69)-இல் புலவர் திரு. வ. தமிழ்வளவன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கிளைக்கழகத் தலைவராக திரு. சு. முருகப்பன் அவர்களும், செயலாளராகத் திரு. க. தமிழவேள் அவர் களும், பொருளாளராகத் திரு. சுப அருணசலம் அவர்களும் தேர்வுற் றனர்.

10. தி. கிளியூர்-கிளைக்கழகம்

முகவை மா. வ. தி. கிளியூரில் சுறவம் ௭ (20-1-69)-இல் உ. த. க. கிளை அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. திரு செ. சி. இராமையா அவர்கள் தலைமை தாங்கினர். திரு. முத்தையா அவர்கள் வரவேற்புரை கூறினர். புலவர் திரு. வ. தமிழ்வளவன் அவர்கள் கழகம்பற்றிய கொள்கை விளக்கம் கூறினர். அதன் பின்னர் தி கிளியூர் கிளைக்கு, திரு. செ. சி. இராமையா அவர்கள் தலைவராகவும், திரு· வீரப்பன் அவர்கள் செயலாளராகவும், திரு. மு. முத்தையா அவர்கள் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

11. புன்செய்ப் புளியம்பட்டி-கிளைக்கழகம்

கோபி வட்டம், புன்செய்ப் புளியம்பட்டியில் உ. த க. கிளை அமைப்புக் கூட்டம், கோவை மாவட்டத் தலைவர் திரு. கா. இளமுருகனார் தலைமையில் சிலை ௧௫ (29-12-68) அன்று நடந்தது. அமைப்புச் செயலாளர் இவ்வூரில் உ. த. கழகக் கிளை நிறுவவேண்டிய தேவைகளையும் அதன் நோக்கங்கள், நெறிமுறைகள் ஆகியவை பற்றியும் விளக்கிப் பேசினார். பின்னர் திரு. மா. உ. வெற்றிவேந்தன் அவர்கள் தலைவராகவும், திரு. ப. கு. முருகவேள் அவர்கள் செயலாளராகவும், திரு. ந. அருணன் பொருளாளராகவும் ஒருமனமாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

அறிக்கை எண்: உ. ந. க. 3/2000

அ. மாவட்ட அமைப்பாளர்களுக்கு

மாவட்ட அமைப்பாளர் சிலர் கேட்ட வினாக்களும் விளக்கங்களும்.

1. நெறிமுறைச் சுவடிகள் விற்கும் பணத்தைத் தலைமைக்கழகப் பொருளாளர்க்கு விடுக்க வேண்டும் என அறிக்கையில் உள்ளது. ஆனால் முந்தைய தலைமைக் கழகத் தனிமடலில் விற்பனைப் பணத்தை அந்தந்தக் கிளைக்கழக வரவு செலவுக் கணக்கில் வரவு வைத்துக் கொள்ளச் சொல்லப்பட்டுள்ளதே. எது சரி?

தலைமைக் கழகப் பொருளாளர்க்கு விடுக்கவேண்டும் என்பதே சரி. தலைமைக் கழகப் பொருள் வருவாய் குறைவாக இருப்பதாலேயே இவ் வேற்பாடு. இதனை எல்லாரும் கட்டாயம் கடைப்பிடித்தல் வேண்டும்.

இதற்குமுன் வரவு வைத்திருப்பினும் அதனைச் செலவாகக் காட்டிப் பொருளாளர்க்கே விடுத்தல் வேண்டும். கிளைக் கழகங்களும் விற்பனைத் தொகையை நேரே தலைமையகப் பொருளாளர்க்கே விடுக்க.

2. எஞ்சிய உறுப்பினர் கட்டணப் பற்றுச்சீட்டுச் சுவடியைத் தலைமைக் கழகத்திற்கு விடுப்பதை விட மாவட்ட அமைப்பாளர் அல்லது தலைவர்பால் இருத்தல் நலமெனக் கருதப்படுகின்றது. மீண்டும் எங்கேனும் கிளைக்கழகம் அமைத்தால் உதவும் இல்லையா?

மாவட்ட அமைப்பாளர் தமக்குத் தேவை எனக் கருதினால் அவரே அவற்றை வைத்துக் கொள்ளலாம். தேவையன்று எனக் கருதுவாராயின் தலைமைக் கழகத்திற்கு அவற்றை விடுத்துவிடச் செய்யலாம்.

3. மாத விளத்த அறிக்கைகள் கைப்படியெடுக்கப்படுவது தொல்லை தருவதும் இயலாததும் ஆகையால், அவை அச்சிடப்பெற்றுத் தலைமைக் கழகத்திலிருந்து விடுக்கப் பெறுமா?

தலைமைக் கழகத்திற்குப் போதிய வருவாயும் வாய்ப்பும் இலவாகையால், அவை இங்கு அச்சிடப் பெறுவது இப்பொழுதைக்கு இயலாதது. வாய்ப்பும் ஏந்தும் உள்ள கிளைக் கழகங்கள் அவற்றை அச்சிட்டுப் பிற கழகங்களுக்குக் குறைந்த விலைக்குத் தருமானால் பயனுடையதாக விருக்கும். கிளைக் கழகத்திற்கும் இஃதொரு வருவாயாக அமையும். இயன்றவை அறிவிக்கக் கேட்டுக் கொள்கின்றேன்.

4. உறுப்பினர் சேர்ப்புப் படிவத்தில் முதற் பக்கத்தில் இருமுறையும் மறுபுறத்தில் ஒருமுறையும் கையொப்பம் பெறுவது மிகையன்றோ?

கையொப்பம் பெறுவதே கடினமானால் செயற்படுதல் எங்ஙன்? சில அரசினர் படிவங்களில் பதினான்கு முறைகூட கையொப்பங்கள் பெறப்படுகின்றன.

5. உறுப்பினர் சேர்ப்புப் படிவத்தின் இரண்டாம் பக்கத்தில் உள்ள மூன்றும் உறுதிமொழி பற்றிய விளக்கம் தேவை. சமயக் கொள்கைகளையோ சமயப் பெயரையோ கடைப்பிடிக்கலாகாது என்பது வலியுறுத்த வேண்டிய ஒன்றா?

உறுதிமொழியில் உள்ள 'வேறுபாடுகளை' என்பதைக் கருத்தில் கொள்ளவும். தனிப்பட்ட எந்தச் சமயமும் உ. த. க. சார்பில் வலி யுறுத்தப்படலாகாது என்பதே அவ்வுறுதிமொழியின் உட்கருத்தாகும்.

6. கட்சிப் பெயரையும் கொள்கைகளையும் சேர்ப்புப்படிவத்தின் வாயிலாகத் தெரிவிக்கத் தூண்டுவது தேவைதானா?

தேவைதான். பிறகட்சிச் சார்பாளர்கள் எவ்வளவில் நம் கொள்கை களை ஏற்றுக் கொள்கின்றனர் என்பதை அறியவும் இன்றியமையாத பிற குறிப்புகளுக்காகவுமே அவ்வாறு வேண்டப்படுகின்றது.

7. மாவட்டப் பொருளாளர், செயலாளர்களை இக்கால் யார் அமர்த்துவது? தேவையில்லையெனில் இருவர் வேலைகளையும் மாவட் டத் தலைவரே செய்யலாமா?

ஆட்சிமுறைக்குக் கடினமான எண்ணிக்கையில் கிளைக்கழகங்கள் தோற்றுவிக்கப் பெறுமானால், மாவட்டத் தலைவர் (அஃதாவது இப் பொழுதுள்ள அமைப்பாளர்) க. நெ. மு/௩/3/இ, ஈ வகுமுறைப்படி பொருளாளர் செயலாளர்களைத் தேர்வு செய்து கொள்ளலாம். 'தேவை யில்லை' 'தேவை' என்பது எண்ணிக்கை அளவைப் பொறுத்ததே ஆகும். வட்டக் கழகத் தோற்றமும், இயக்கமும்கூட அதைப் பொறுத் தது தான்.

8. கிளைக்கழகங்கள் மாத அறிக்கைகளை விடுக்காவிடிலோ, காலந்தாழ்த்து விடுத்தாலோ என்ன செய்வது?

கிளைக்கழகங்களும் மாவட்டக் கழகங்களும் அறிக்கைகளைக் கட் டாயம் குறிப்பிட்ட நாளைக்குள் விடுத்தே ஆகல் வேண்டும். நாம் நடத்துவது நாமே விரும்பி யமைத்துக் கொண்ட ஓர் இயக்கம். இதிற் புறக்கணிப்புக்கு இடமே இருத்தல் கூடாது. எக்காரணம் பற்றியும் அறிக்கைகள் விடுப்பதைத் தவிர்த்தல் கூடாது. அறிக்கைகள் விடுப் பதை ஒரு கடமையாகக் கொள்ளுதல் வேண்டும்.

9. வட்டங்கள் குறைவாக உள்ள நீலமலை போன்ற மாவட்டங் களில் வட்டக் கழகங்கள் அமைக்காமல் மாவட்டக் கழகமே நேரிடை யாக ஊர்க்கிளைகளுடன் தொடர்பு வைத்துக் கொள்ளலாமா? கொள் ளலாம் எனில் அக்கிளைக் கழக உறுப்பினர்களிலிருந்தே மாவட்டக்

கழகச் செயலர் பொருளர் முதலியோரைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள லாமா?

ஐந்து வட்டங்களுக்குக் குறைவாக உள்ள மாவட்டங்களில் வட்டக் கழகம் தேவையில்லை. அக்கால் கிளைக்கழகத் தலைவர்களினின்றே மாவட்டக் கழகச் செயற்குழுவை அமைத்துக் கொள்ளலாம்.

10. ஐந்து உருபா உறுப்பினர் கட்டணம் கட்ட விரும்புவோர் அனைவரும் ஆட்சிக்குழு உறுப்பினராக முடியுமா? மாவட்டத் தலைவர்க்கு உறுப்பினர் கட்டணம் மூன்று, ஐந்தா?

ஆட்சிக்குழு உறுப்பினர்க்குத்தான் உறுப்பினர் கட்டணம் உருபா ஐந்து. குழு உறுப்பாண்மைக்குத்தான் கட்டணமே அன்றி, கட்டணத்திற்காக உறுப்பாண்மை அன்று. மாவட்டத் தலைவர் எல்லாரும் ஆட்சிக்குழு உறுப்பினர் ஆகையால் (பார்க்க: க. நெ. மு: ச) அவர்க்கு உறுப்பினர் கட்டணம் உருபா ஐந்தே.

11. மாவட்டக்குழு உறுப்பினர் கட்டணங்களை என்ன செய்வது? மாவட்டக்குழு உறுப்பினர்கள் கிளைக்கும் உறுப்பினர் கட்டணம் செலுத்தவேண்டுமா?

மாவட்டக்குழு உறுப்பினர் கட்டணங்களை தம் பொறுப்பில் வைத்திருக்கவேண்டும். மேற்கழக உறுப்பினர்கள் கீழ்க்கழக உறுப்பினர் கட்டணம் செலுத்தத் தேவையில்லை.

12. ஒவ்வொரு சிற்றூரிலும் ஊர்க்கிளை யமைக்க உண்மைத் தமிழன்பர்கள் கிடைத்தல் அரிதாகையால், மாவட்ட முழுவதிலுமுள்ள தமிழன்பர்களை ஒன்றுக்கி ஒரு நிலையான மாவட்டக் கிளைக்கழகம் ஏற்படுத்தினால் என்ன? ஊர்க்கிளைகள் பலவற்றைத் தொடங்கி ஆரவாரமாக இருப்பதைவிட மாவட்டத்திற்கு ஒரு கழக மிருந்தாலும் கொள்கைப் பிடிப்புள்ளதாக அதனை அமைப்பதே நன்றென்று தோன்றுகின்றது.

கழகங்களைப் பரவலாக ஏற்படுத்துவதே நாம் அமைத்துக்கொண்ட கொள்கையைச் செயல்படுத்தும் சிறந்தவழி. ஆரவாரமாக இருக்கக் கூடாதென்பதற்காகக் கொள்கையை ஓரிடத்துச் சிறைப்படுத்தியும் விடுதல் கூடாது. எனவே கூடியவரையில் உறுப்பினர் எண்ணிக்கை

குறைந்தாலும் கிளைக்கழகங்களைப் பரவலாகவே தோற்றுவிக்கவும். கிளைகள் இல்லாத அடிமரம் மட்டுமே பயன்தருவதில்லை.

ஆ. பொதுவான பீறு.

0 நம் உலகத் தமிழ்க்கழகம் கடந்த சுறவம் கச (27-1-69)-ஆம் பக்கலன்று கடலூரில் பதிவு செய்யப்பெற்றுவிட்டது. பதிவு எண்: 2/1969.

0 தலைமைக் கழகப் பொருள்நிலை மிகவும் தாழ்வுற்றிருப்பதால் அன்பர்கள் ஆங்காங்கு நன்கொடைகள் திரட்டித் தலைமைப் பொருளாளர்க்கு விடுக்க வேண்டுகின்றேன். நன்கொடை திரட்டும் கழகம் முன்கூட்டியே அதுபற்றித் தலைமைக் கழகத்துக்கு அறிவிக்க வேண்டுகின்றேன்.

மே/பா. தென்மொழி
கடலூர்-க.
சுறவம் 18. திபி. 2000

பெருஞ்சித்திரன்,
பொதுச் செயலாளர்,
உலகத் தமிழ்க் கழகம்.

உலகத் தமிழ்க் கழகம்.

இலச்சினைப் படக்கட்டைகள்.

உலகத் தமிழ்க்கழக இலச்சினைப் படக்கட்டைகள் கீழ்க்கண்ட அளவுகளில் தென்மொழி அச்சகத்தில் கிடைக்கப்பெறும். கிளைக் கழகங்கள் தங்களுக்குத் தேவையான அளவில் படக்கட்டைகளைப் பெற்றுப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

அளவு	விலை (அஞ்சற்செலவு உட்பட)
பெரியது - 3" × 3½"	10-00
இடைநிலை - 2" × 2½"	7-00
சிறியது - 1" × 1½"	5-00

குறிப்பு: இம்மாத இறுதிக்குள் பணம் அனுப்பப்பெறுதல் வேண்டும்.

பொதுச் செயலாளர்,
உலகத் தமிழ்க் கழகம்.

(சுவடி 6-ஓலை 8இன் 27-ஆம் பக்கத்தொடர்ச்சி)

திரு. ஞா. தேவநேயப் பாவாணர், க. மு. அவர்கள்

நிகழ்த்திய

தலைமையுரை.

இடைக்கழகம் அழிந்த காலத்தில்தான் ஆரியர்கள் தமிழ் நாட்டிற்கு வந்தனர். அவர்கள் இந்தியாவிற்கு வந்த காலம் கி. மு. 2000 முதல் கி. மு 1200 வரை என்று சொல்லலாம். அவர்கள் தெற்கு நோக்கி-அஃதாவது தமிழகத்திற்கு வந்தது கி. மு. 1200 ஆகும். அந்தக்காலம் முதலே அவர்கள் தமிழ் மக்களை எப்படியெல்லாம் வென்று அடிமைப்படுத்தலாம் என்றெண்ணிச் செயலாற்றி வந்துள்ளனர். தமிழரைத் தங்கள் வயப்படுத்த வேண்டுமென்றால், தமிழறிவு இன்றியமையாதது என்று எண்ணித் தமிழை விரும்பிப் பயின்றனர். அவர்கள் வந்த காலத்தில் தமிழகம் எல்லா வகையிலும் பொன்னாடாகத் திகழ்ந்தது. எனவே இந்த நாட்டுவளம் அவர்களை இங்கேயே நிலைத்திருக்கச் செய்துவிட்டது.

அவர்கள் வந்தபிறகுதான் கடைக்கழகம் அமைக்கப்பட்டது. இக்கழகத்தின் காலம் கி. மு. 5-ஆம் நூற்றாண்டு முதல் கி. பி. 4-ஆம் நூற்றாண்டுவரை ஆகும் எனச் சென்னைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் வரலாற்றுப் பேராசிரியராக இருந்த திரு. இராமச்சந்திர தீட்சதர் அவர்கள் கூறியுள்ளார்கள். ஒருவகையில் இது பொருந்துவதாகவே தோன்றுகின்றது. இந்தக் கடைக்கழகத்திற்கு முன், பாண்டியன் மதுரையில் தலைநகர் அமைப்பதற்கு முந்தியே இயற்றப்பட்டதுதான் தொல்காப்பியம். இதை இயற்றிய தொல்காப்பியரும் ஓர் ஆரியரே. இந்தக் கருத்தை முதன்முதல் நான்தான் வெளியிட்டேன். எனது ''ஒப்பியன் மொழிநூல்', -முதல் மடலம் முதற் புத்தகத்தில் இதைத் தெளிவுபடுத்தியுள்ளேன். இதனால் தமிழ்ப் பேராசிரியர்கள் சிலரின் வருத்தத்திற்கும் ஆளானேன். இவர்களில் திரு. சோமசுந்தர பாரதியாரும், திரு. கா. சுப்பிரமணியப் பிள்ளையும் குறிப்பிடத் தக்கவர்கள். இவர்கள் என் கருத்தை மறுத்தார்கள். அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. ஏனென்றால் என்னை மறுத்தவர்கள் 'வடமொழி வேறு;

தமிழ் வேறு; தமிழின் தொன்மை கி. மு. 2000க்கு அணியமே' என்ற கொள்கை உடையவர்கள். அவர்கள் என் முடிவை ஒத்துக்கொள்ளாமற் போனதில் வியப்பில்லை.

அவர்கள் அவ்வாறு மறுத்ததற்குக் காரணம் உண்டு. தமிழில் இன்றுள்ள மிகத் தொன்மையான முழு இலக்கணநூல் தொல்காப்பியம் ஒன்றே. இதையும் ஓர் ஆரியர் இயற்றினார் என்று சொல்லிவிட்டால் தமிழின் பெருமை குலைந்துவிடுமே என அவர்கள் அஞ்சினார்கள். ஆனால் என்னைப் பொறுத்த அளவில், உண்மையை ஆராய்ந்து காணும் எனது நோக்கத்திற்கு இத்தகைய எதுவும் தடையாக நிற்க வில்லை. உண்மையில் கிறித்தவன் ஒருவன் குமரிநாட்டின் பழமையை ஒத்துக்கொள்ள மாட்டான். அப்படி ஒத்துக்கொண்டால் அவனைக் கிறித்தவன் என்று மற்ற கிறித்தவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். என்றாலும் எனது பரந்த மனப்பான்மைக்கு முன்னால், இப்படிப் பட்ட சமய உணர்ச்சி குறுக்கிடவில்லை.

தொல்காப்பியர் ஆரியர் என்று கூறியதுபற்றி சோமசுந்தர பாரதியார் உட்பட வருத்தப்பட்டதைக் குறித்து நான் பொருட்படுத்த வில்லை யென்றாலும், தமிழ்க்கடலாகிய மறைமலையடிகளார் அது குறித்து வருந்தியது உண்மையிலேயே எனக்கு வருத்தம் விளைத்தது. சென்னை முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் நான் ஓராண்டு தலைமைத் தமிழாசிரியனாகப் பணியாற்றிய பொழுது, என்து முயற்சி யால் தொடங்கப்பட்ட தனித்தமிழ் இயக்கக் கூட்டம் ஒன்றிற்குத் தலைமை தாங்குமாறு மறைமலையடிகளாரை அழைத்தேன். ஆனால் அடிகளார் வர மறுத்துவிட்டார்கள். இதற்கு அவர்கள் காட்டிய காரணியங்களில்ஒன்று, நான் தொல்காப்பியரை ஆரியர் என்று காட்டிய தாகும். இதையறிந்த நான், பின்னர் ஒருமுறை அவரை நேரிற் கண்டு, குமரிநாட்டின் பழமையையும், ஆரியர்கள் இந்த நாட்டிற்கு வந்த காலத்தையும், அவர்கள் தமிழ்கற்ற நோக்கத்தையும், தொல்காப் பியத்திற் காணப்படும் ஆரியத் தொடர்பான கருத்துகளையும் பற்றி விரிவாக எடுத்துச் சொன்னபிறகு ஒருவாறு என் கருத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

எதற்காக இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், தொல்காப்பியர் ஆரியர் என்று கொள்வதால், தமிழின் பெருமை எந்த வகையிலும்

குறைந்துவிடாது என்பதற்காகத்தான். தமிழ் மிகவும் பழமையான மொழி. பழமையென்றால், இன்று உலகத்தில் வழங்குகின்ற எல்லா மொழிகளையும்விடத் தொன்மையானது என்று சொல்லத்தக்க வகையில் மிக மிகப் பழமையான மொழி. ஆரியத்துக்கு மூலமொழி தமிழ்தான்; இப்படி நான் சொல்வது வியப்பாக இருக்கலாம்; ஆனால் உண்மை. தமிழுக்கும் மற்ற திரவிடமொழிகளுக்கும் உள்ள தொடர்பு தந்தைக்கும் மகனுக்கும் உள்ள உறவு போன்றதாயின், தமிழுக்கும் ஆரியத்துக்கும் உள்ள தொடர்பு பாட்டனுக்கும் பேரனுக்கும் உள்ள உறவுமுறையை யொத்ததாகும்.

இந்த உண்மை பல ஆண்டுகளுக்கு முன்பே எனக்குப் புலப்பட்டது. அதுமுதல் மேனாட்டறிஞர் பலர் எழுதிய வரலாற்று நூல்களை ஊன்றிக் கற்கலானேன். பலநாட்டு மொழிகளைப் பற்றிய ஆராய்ச்சி நூல்களைப் பயின்றேன். டாரவின் என்ற அறிவியல் வல்லுநரின் கூர்தல் கொள்கையை (Evolution theory) விளக்கும் நூல்களைப் படித்தேன். இதன்பின், எல்லாவகையாலும் என் கருத்து உறுதிப்படுவதை உணர்ந்தேன்.

இந்த ஆராய்ச்சியால் முதல் மாந்தனின் பிறந்தகம் குமரி நாடே என்பது தெளிவாயிற்று. இந்த நாட்டில் வாழ்ந்த மக்கள் ஏனைய மக்களுக்குப் பல்லாவிரம ஆண்டுகள் முற்பட்டவர் என்பதும விளங்குவதாயிற்று. ஆனால், முதலிரண்டு கழக நூல்கள் அழிக்கப்பட்டதால், இத்தகைய பழம்பெருநாட்டில் இயற்றப்பட்ட நூல் எதுவும் இப்போது கிடைக்கவில்லை.

இன்றுள்ள தமிழ் நூல்களுள் பழமையான தொல்காப்பியம் இடைக்கழகத்திற்குப்பிந்தியது; ஆனால் கடைக்கழகத்திற்குமுந்தியது. தொல்காப்பியர் காலத்தில் கடைக்கழகம் அமையவில்லை. கடல்கோளுக்குத் தப்பிய பாண்டியன் அதுகாலை மணலூரில் தங்கியிருந்தான். அப்போதுதான் பாண்டவர்களுள் ஒருவனான அருச்சுனன் தெற்குநோக்கி வந்தான். அவன் வந்த சமயத்தில் பாண்டியன் சிக்காதாபுரியில் தங்கியிருந்ததாக வடமொழிப் பாரதம் குறிப்பிடுகின்றது. சிக்காதா என்னும் சொல்லுக்கு மணல் என்பது பொருள். எனவே பாண்டியன் மணலூரில் தங்கியிருந்தான் என்பதே பொருந்தும். ஆனால் என்ன காரணத்தினாலோ திருவிளையாடற் புராணம மணவூர் என்று இதைக்குறிப்பிடுகின்றது. கழகம இல்லாததால்தான் நிலந்திரு

திருவிற் பாண்டியன் அவையத்துத் தொல்காப்பியம் அரங்கேற்றப்பட்டது. தொல்காப்பியப் பாயிரத்தில் "ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்" என்ற பெயரால் தொல்காப்பியர் குறிக்கப்படுகிறுர். இத்தொடரில் "ஐந்திரம்" என்று சொல்லப்பட்ட நூல் வடமொழி இலக்கணமே. ஆனுல் அது தமிழ் இலக்கணத்தைத் தழுவியது. அதனுல்தான் அதை ஆரியர்கள் தமது திறமையால் ஒழித்துவிட்டார்கள். ஐந்திரம் பாணினியத்துக்கு முற்பட்டது பாணினி தமது புலமையால் அதனை வழக்கிழக்குமாறு செய்துவிட்டார். மேலும், "நான் மறை முற்றிய அதங்கோட்டாசான்" எனும் தொடரில், "நான்மறை" என்றது அந்தக் காலத்தில் இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்களையே குறிக்கும். இவ்வாறன்றி அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்குமே இங்குக் குறிப்பிட்ட நான்மறையாகும் என்பது புலவர்களுடைய கற்பனையே. இது பொருந்தப் பொய்த்தலாகும். அக்காலத்தில் ஆரியர்கள் வடமொழியிற் சிறந்த தேர்ச்சி பெற்றிருந்ததோடு, தமிழிலும் முதிர்ந்த புலமை பெற்றிருந்தனர். இதனுல்தான் தொல்காப்பியம் அதங்கோட்டாசான் தலைமையில் அரங்கேற்றப்பட்டது. இந்த அதங்கோடு தற்காலத்து மலையாள நாட்டிலுள்ள திருவாங்கூர் என்னும் ஊரேயாகும். அதங்கோடு என்னும் பெயருக்கு முன் "திரு" சேர்ந்து திருவதங்கோடு ஆகி, பின்னர் அது திருவிதாங்கோடு என மாறி, நாளடைவில் திருவிதாங்கூர் எனத் திரிந்து, இறுதியாக ஆங்கிலர் ஆட்சியில் திருவாங்கூர் ஆயிற்று.

ஆரியர் இங்கு வந்து, பல தலைமுறைகள் ஆன பின்பே, தொல்காப்பியம் இயற்றப்பட்டது. அதனுல்தான் அவர்கள் தமிழிற் சிறந்த புலமை பெற்று விளங்கினர். இதில் வியப்பு ஏதும் இல்லை. இத்தாலி நாட்டிலிருந்து தமிழகத்திற்கு வந்த வீரமாமுனிவர் ஒரே தலைமுறையில் தமிழைத் திறம்படக் கற்று, முதலில் உரைநடை நூல்கள் இயற்றத் தொடங்கிப் பின்னர் கம்பர், புகழேந்தி போலத் தேம்பாவணியென்னும் பாவியத்தை இயற்றி, இறுதியாக "ஐந்திலக்கணத் தொன்னூல்" என்னும் இலக்கண நூலையும் யாத்தார் என்றுல், ஆரியர்கள் பல தலைமுறைகளில் தமிழை ஐயந்திரிபறக் கற்றுத் தேர்ந்தனர் என்பதில் சிறிதும் ஐயங்கொள்ள இடமேயில்லை.

நிற்க, தொல்காப்பியம் என்பது முழுமுதல் இலக்கண நூல் அன்று. அதற்கு முந்திய இலக்கண நூல்களிற் சொல்லப்பட்ட கருத்

துகளையும், உலக வழக்கிலிருந்த மொழி மரபுகளையும் சேர்த்துச் செய்யப்பட்ட தொகுப்புநூலே தொல்காப்பியம். "செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப் புலந் தொகுத்தோனே" என வரும் தொல்காப்பியப்பாயிரத்தால் இதையுணர லாம். தமிழ் படித்தவர் அனைவரும் பவணந்தி முனிவர் இயற்றிய நன்னூலை அறிவர். இந்த நன்னூலின் பொருளைத் தொகுத்துப் புலவர் குழந்தை என்பவர் 'நன்னூற் சுருக்கம்' என்றொரு நூல் இயற்றியுள்ளார். இதுபோன்றதுதான் தொல்காப்பியம். இந்தநூலில் ஆசிரியரின் சொந்தச்சரக்கு, ஆரியத்தொடர்புடைய கருத்துகளைச் சேர்த்ததுதான். இதைத் தொல்காப்பியர் இயற்றிய காலம் கி மு. 700. "வடவேங்கடம் தென்குமரி" யாயிடை செந்தமிழ் வழங்கியகாலம் அது. அந்தக் காலத்தில் செய்யுளுக்கு உரிய சொற்கள் எவையென்று கூறவந்த தொல்காப்பியர்,

> "இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொலென்(று)
> அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே"

என்கிறார். அஃதாவது இயற்சொல், திரிசொல், திசைச்சொல் என்னும் மூவகைத் தமிழ்ச் சொற்களுடன் வடசொற்களையும் சேர்த்துக் கூறுகின்றார். இதிலிருந்தே தொல்காப்பியர் ஆரியர் என்பதும், அவர் வடவரது மொழியையும், பழக்க வழக்கங்களையும் தமிழிற் புகுத்துவதற்காகவே தொல்காப்பியம் இயற்றினார் என்பதும் நன்கு விளங்கும்.

தொல்காப்பியர் ஆரியர் என்பதற்கு மற்றும் பல சான்றுகள் உண்டு. தொல்காப்பியத்துள் ஒன்பது என்னும் சொல்பற்றிய குறிப்பு அவற்றுள் ஒன்று. தொண்ணூறு, தொள்ளாயிரம் என்றசொற்களின் பிறப்புக்குறித்து அவர்வகுத்த இலக்கணவிதியையெடுத்துக்கொண்டால் இந்த உண்மை புலப்படும். ஒன்பது + பத்து = தொண்ணூறு, ஒன்பது + நூறு = தொள்ளாயிரம் என்று புணர்த்துக் காட்டுகிறார். அவர் காலத்தில் தொண்டு என்னும் சொல்லே ஒன்பதைக் குறிக்கப் பயன் படுத்தப்பட்டது. ஒன்று முதல் எட்டுவரை யுள்ள எண்ணுப்பெயர்கள் குற்றியலுகர ஈறு பெற்றிருந்தது போலவே, தொண்டு எனக் குற்றிய லுகர இறுதி கொண்ட சொல்லே அக்காலத்து வழங்கப்பட்டது. எப்படி இதை அறிகிறோம்? "தொண்டு தலையிட்ட பத்துக்குறை எழுநூற்று" எனத் தொல்காப்பியத்திலேயே (செய்யுளியலில்) வருகிறது. அதுவுமல்லாமல், "தொண்டுபடு திவவின் முண்டக நல்யாழ்" என இசை நூல்களிலும் இச்சொல் பயின்று வருகிறது.

தொண்டு என்பது தொளை என்பதன் அடியாகப் பிறந்தது. (இவ்விரண்டிற்கும் வேர்ச்சொல் தொள் என்பது) உடம்பில் உள்ள (9) தொளைகளை வைத்துத் தொண்டு என்னும் சொல் உருவாக்கப்பட்டது. மேனாட்டு மொழி நூல் அறிஞரான கால்டுவெல்லும் இவ்வாறே 'கை' என்னும் உறுப்புப் பெயரிலிருந்து பிறந்ததே ஐந்து என்னும் சொல் எனத் தம் ஒப்பிலக்கண நூலிற் காட்டியுள்ளார். கை-ஐ-ஐந்து என இவ்வாறு திரிபு முறையும் கூறுகிறார். இன்று "ஒருகை போடு இரண்டு கை போடு" என்று உலகவழக்கில், படியாத மக்கள்கூட வழங்குகின்றார்களே! இதுபோலத்தான் தொண்டு என்று சொல்லும் தொல்காப்பியர் காலத்தில் வழக்கில் இருந்தது. கடைக்கழகக் காலத்திற்குப் பின்னர்தான் வழக்கற்றுப் போயிற்று.

ஒன்பது + பத்து = தொண்ணூறு எனப் புணர்ச்சி முறை கூறும் தொல்காப்பியர், நிலைமொழியில் உள்ள ஒகர உயிருடன் தகரமெய் சேர்ந்ததாகவும், பின்னர் 'பது' கெட்டதாகவும் அதன்பின் னகர வொற்று ணகர வொற்றாய் மாறியதாகவும், வருமொழியில் 'பத்து' என்பது நூறென மாறியதாகவும், நிலைமொழியில் ணகரம் இரட்டிக்க, அவ்விரட்டித்த ணகரம் வருமொழியில் உள்ள 'நூ' வுடன் சேர்ந்து 'ணூ' எனத் திரிபு பெற்றதாகவும் விதி வகுக்கிறார். இவ்வாறே ஒன்பது + நூறு: தொள்ளாயிரம் என்று சொற்புணர்ச்சி செய்து, நிலைமொழி ஒகரத்தில் தகரமெய் சேர்ந்ததாகவும், வருமொழியில் 'நூறு' ஆயிரம் ஆனதாகவும், பின்னர் நிலைமொழி னகரமெய் ளகரமெய்யாய்த் திரிந்ததாகவும். அந்த ளகரமெய் இரட்டித்த பிறகு, இரட்டித்த ளகர மெய்யுடன் வருமொழி முதல்நின்ற 'ஆ' சேர்ந்து 'ளா' ஆயினதாகவும் விதி கூறுகின்றார்.

இவையெல்லாம் கண்கட்டு வேலைகள் போலல்லவா இருக்கின்றன! ஏதோ மணல் கடலையாவதும், தோல் நரியாவதும் போல மாயமாக இருக்கின்றனவே! இதற்குப் பொருத்தமான மற்றோர் எடுத்துக் காட்டு கூறலாம் என்றால், கேரளம் என்னும் சொல் 'நாரிகேள' என்னும் சொலலிலிருந்து வந்தது என வடமொழியாளர் கூறுவதைச் சொல்லலாம். 'நாரிகேள' என்னும் சொல் தென்னைமரத்தைக்குறிப்பது; மலையாளத்தில் தென்னைமரங்கள் மிகுதியாக இருப்பதால் கேரளம் என்று பெயர் வந்ததாம்! எப்படி யிருக்கிறது ஆராய்ச்சி! இதுதான் போகட்டுமென்றால், மற்றுமொரு வேடிக்கையான சொல் ஆராய்ச்சி

நமக்கு நகைப்பை விளைவிக்கிறது. அதுதான் 'நரயவஹ' (மனிதனைப் போன்றவன்) என்னும் சொல்லிலிருந்து 'வானரம' என்பது பிறந்த தென்னும் வடமொழியாளர் கூற்று, 'நரயவஹ' என்பது 'யவநரஹ' என மாறிப் பிறகு வானரம் எனத் திரிந்ததாம! ஏனிப்படிச் சுற்றி வளைத்து மூக்கைத்தொட முயல்கிறார்கள்? வால் + நரம் = வானரம் (வாலுள்ள மனிதன்) என எளிதாகச் சொல்லிவிட்டுப் போகலாமே!

இஃதிப்படியிருக்க, தொல்காப்பியத்தில் வரும் ஒன்பது + பத்து: தொண்ணூறு, ஒன்பது + நூறு: தொள்ளாயிரம் என்பன குறித்த நூற்பாக்கள் பிற்காலத்தன என்றும், இடைச்செருகலாய் வந்தவை எனவும் இக்காலத்துப் புலவர்கள் சிலர் கூறுகின்றனர். அப்படியானால், பிற்காலத்தில்-கி. பி. 12-ஆம் நூற்றாண்டில் நன்னூல் இயற்றிய பவணந்தியார் ஏன் இந்த விதிகளையே திரும்பக் கூறுகின்றார்? மாற்றிச் சொல்லியிருக்கலாமே! அவரும் ஒரு பிராமணர். அதனால் தொல்காப்பியர் கருத்தையே பின்பற்றி நூற்பா இயற்றிவிட்டார்!

தொல்காப்பியத்தை ஆழ்ந்து படித்துப் பார்த்தால், பாயிரம் முதல் இறுதிவரை தொல்காப்பியர் ஆரியமரபுதழுவியவர் தமிழில்உரிச் சொல் என்பது, செய்யுளுக்கே உரிய, எளிதிற் பொருள் விளங்காத சொல்லைக் குறிக்கும். ஆனால், தொல்காப்பியர் எளிய சொற்களைக்கூட உரிச்சொற்கள் என்கிறார். "தீர்தலும் தீர்த்தலும் விடற்பொருட்டாகும்" என்று சொல்கிறார். தீர்தல் என்பது என்ன, அவ்வளவு கடினமான சொல்லா? தீர்ந்தது என்றால், விட்டுச்சென்றது-முடிந்தது என்பது எல்லாருக்கும் தெரியுமே! "அட, அது தீர்ந்துபோயிற்று அப்பா!" என்று, படியாதவன்கூடச் சொல்கிறானே! இதுபோலவே "பழுது பயம் இன்றே" என்று ஒரு மற்றொரு நூற்பாவில் கூறுகிறார். பழுது பட்டதென்றால், பயனற்றுப் போனது என்பதுதானே பொருள்! எல்லாரும் விளங்கிக்கொள்ளக் கூடிய சொல்தானே இது! இது மிகக்கடினமான சொல்போலவும், செய்யுளில் மட்டுமே பயின்று வரக்கூடியது போலவும், உரிச்சொல் வரிசையில் இதைச் சேர்த்துவிட்டாரே!

மற்றும் மரபியலில்,

'நூலே கரகம் முக்கோல் மணையே
ஆயுங் காலை அந்தணர்க் குரிய"

என்று சொல்கிறார். இங்கு அந்தணர் என்று குறிக்கப்பட்டவர்கள்

ஆரியப் பார்ப்பனரே. அவர்காலத்தில் ஆரியர்கள் தமிழகத்தில் வேரூன்றி விட்டனர். அதுமட்டும் அன்று; 'அந்தணர்' என்ற சொல்லும் அவர்களுக்கே உரியதாக நிலைபெற்றுவிட்டது. எனவே, தொல்காப்பிய மரபியல் சொன்மரபுமட்டும் கூற எழுந்ததன்று; தொழில் மரபும் உடன்கூறவே தோன்றியதாகும் என்று நாம் உய்த்துணரலாம். இந்த நுட்பத்தை அறியாத தமிழ்ப் புலவர்கள் சிலர், "தொல்காப்பியர் மரபியலில் தொழிலைப் பற்றிச் சொல்லியிருப்பாரா? சொல்லமாட்டார்; ஆகவே இத்தகைய நூற்பாக்கள் இடைச்செருகலாகப் பிற்காலத்தாரால் சேர்க்கப்பட்டவை" என்று கூறுகிறார்கள். இது தவறு. தொல்காப்பியர் காலத்தில் நான்கு குலப்(வருணப்) பாகுபாடு ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது என்பதையே இந்நூற்பா புலப்படுத்துகிறது. இது பற்றித் "தொல்காப்பிய விளக்கம்" என்னும் எனது நூலில் தெளிவுபடுத்துவேன்.

தொல்காப்பியம் ஓர் இலக்கணநூல் என்பதை நாம் அறிவோம். ஒரு மொழியில் எது முதலில் தோன்றும், இலக்கணமா? இலக்கியமா? இலக்கியந்தான் முதலில் தோன்றும். பல இலக்கியங்கள் தோன்றிய பிறகே இலக்கணநூல் உண்டாகும். இலக்கியங்களில் எத்தகையவை முதலில் உண்டாகியிருத்தல் கூடும்? அகம், புறம் என்னும் இருவகைப் பொருள் பற்றியனவே முதலில் தோன்றியிருக்கும். எனவேதான் பொருளிலக்கணம் எழுத்து, சொல்லிலக்கணங்களைவிடக் காலத்தால் முற்பட்டது என்று நான் கருதுகிறேன். தமிழுக்கே தனிச் சிறப்பு தருவது இந்தப் பொருளிலக்கணந்தான். அப்படியிருந்தும், தமிழ் கற்ற பிராமணர்கள் "அஃதுஒன்றுமில்லை ஐயா, வெறும்Poetics-பாட்டியல்; அவ்வளவுதான்!" என்கிறார்கள். காமில் சோலவில் என்ற செக்கோசுலோவாக்கியக் கோமாளி ஒருவர் பிராமணத் தமிழறிஞர்கள் எழுதிய நூல்களைப் படித்துவிட்டு, இப்படிப்போல எதையாவது உளறிக்கொண்டிருக்கிறார்! தமிழின் சிறப்பை அறிய அவர் படித்த நூல்கள், நற்றிணை என்னும் கழக இலக்கியமும், சுப்பிரமணியன் என்பவர் எழுதிய 'நாலுவேலி நிலம்' என்னும் நாடகமும் ஆகிய இவ்விரண்டுமே!

(தொடரும்)

நன்றி!

ஆசிரியருக்குப் பொங்கல் வாழ்த்து விடுத்த அன்பர்கள் அனைவர்க்கும் மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அமைச்சர், "தென்மொழி"

கண்ணுக்குப் புலனாகாத ஒளி.

த. சலாவுத்தீன், அறி. இ., ஆ. ப.

3. செந்நீல மேல் ஒளி (Ultraviolet Light)

1801-ஆம் ஆண்டு செருமனியைச் சேர்ந்த சான் வில்யெல்ம் ரிட்டர்(Johann Wilhelm Ritter)என்ற'இயல்பியல் அறிஞர்' (Physicist), வண்ணநிரலின் செந்நீலக் கதிர்க்கு (Violet) அப்பால் கூட சில புலனாகாத ஒளிக்கதிர்கள் உள்ளன என்று கண்டுபிடித்தார்.

இவர் கதிரவன் ஒளியை முப்பட்டகக் கண்ணாடியில் விழும்படி செய்து இயல்பான வண்ண நிரலை உண்டு பண்ணினார். வெள்ளிக் குளோரைடு (Silver Chloride) கரைசலை ஒவ்வொரு வண்ணத்தின் முன்னும் வைத்தார். (வெள்ளிக் குளோரைடு கரைசல் கதிரவன் ஒளி பட்டால் கருக்கும் பண்பைப் பெற்றதாகும்) சிவப்பு வண்ணத்தின் முன் ஒரு மாறுதலும் அடையவில்லை. ஆனால் செந்நீல வண்ணத்தின் அருகே செல்லச் செல்லச் சிறிது மாறுதல் ஏற்பட்டது. செந்நீலத் திற்கு அப்பால் கொண்டு சென்றவுடன் கரைசல் கருத்துவிட்டது. இதிலிருந்து ரிட்டர் செந்நீலக்கதிருக்கு அப்பால் ஒளிக்கதிர்கள் இருக் கின்றன என்று முடிவு செய்தார். செந்நீல வண்ணத்திற்கப்பால் இக் கதிர்கள் இருப்பதால் இவற்றிற்குச் செந்நீல மேல் கதிர்கள் (Ultraviolet rays) எனப் பெயரிட்டார். (Ultra-beyond).

கதிரவன் ஒளி மிகுதியும் பட்டதும் புண் ஏற்பட்டால் (Sunburn) அதற்குக் காரணம் செந்நீல மேற்கதிர்களே. கதிரவன் எப் பொழுதும் செந்நீல மேற்கதிர்களை அனுப்பிக் கொண்டே இருக்கின் றது. இவையெல்லாம் நிலத்தை அடைந்தால் நாமெல்லாரும் எரிந்து சாம்பலாகி விடுவோம். ஆனால் விண்வெளியில் முக்கட்டுத் தீயதை (Ozone) இக் கதிர்களைத் தடுத்து விடுகிறது. முக்கட்டுத்தீயதை விண் வெளியில் 10-இலிருந்து 40 கற்கள் உயரத்தில் பரவியுள்ளது. மலை யேறிகள் மிக உயரமான மலைகளில் ஏறினால் கதிரவன் ஒளி கூர்மை யாகத் தாக்கிப் புண்களை உண்டாக்கி விடுகின்றது.

செந்நீலக் கீழ்க்கதிர்கள் குறைந்த அளவில் மாந்தரின் உடல் நலத்திற்கு இன்றியமையாதவை. இரண்டாம் உலகப் போரின்போது

செருமனியில் பால், வெண்ணெய் போன்ற பொருள்கள் கிடைப்பது அரிதாகிவிட்டதால் பல குழந்தைகள் 'ரிக்கெட்சு' என்ற மண்ணை நோயால் பீடிக்கப்பட்டனர். இந் நோய் வந்தால் எலும்புகள் மென்மை யாகி எலும்புகளில் கோணல் தன்மை ஏற்படும். இஃது உணவில் 'சுதையம்' (Calcium) குறைவாக இருப்பதால் உண்டாகும்ஒருநோய். இந்நோயைச் செந்நீல மேற்கதிர்களைப் பயன்படுத்திக் குணமாக்க லாம் என்று மருத்துவர்கள் ஆய்ந்து கண்டு பிடித்தனர். அதுமட்டு மல்லாது 'டி' சாரத்தை உடல் விளைவிக்கச் செந்நீல மேற்கதிர்கள் தேவையென்பதும், இச்சாரம் எலும்புகள் சரியாக அமையப் பெரிதும் உதவுகின்றது என்பதும் கண்டு பிடிக்கப்பட்டன. ஆகையால் மேற் சொன்ன எலும்பு நோயுள்ள குழந்தைகளைக் கதிரவன் ஒளிபடும்படி செய்தோ, தனி விளக்கின் மூலம் செந்நீல மேற்கதிர்கள் உண்டாக்கிச் செலுத்தியோ, நோயைக் குணப்படுத்தலாம்.

நம்மைச் சுற்றிலுமுள்ள காற்றில் ஏராளமான நோய் நுண்ணுபி ரிகள் இருக்கின்றன. இந் நுண்ணுபிரிகள் மிக வேகத்தில் பெருக்க மடைகின்றன. இந் நுண்ணுபிரிகள் கொல்லப்படா விட்டால் நம்மால் காற்றை உயிர்க்கமுடியாமல் திணறுவோம். ஆனால் செந்நீலக் கதிர் களின் கதிர்வீச்சு இவற்றைக் கொன்று நம்மைப் பாதுகாக்கின்றது.

மேற்சொன்ன நோய் நுண்ணுயிரிகளைக் கொல்லும், செந்நீல மேற்கதிர்களின் பண்பு மாந்தனால் பலவாறு பயன்படுத்தப்படுகிறது. பெரிய பால் பண்ணைகளிலும்; உணவுப்பொருள் செய்கின்ற இடங்களி லும், அறுவை செய்யும் மருத்துவ அறைகளிலும், செந்நீல மேற்கதிர் விளக்குகள் பயன் படுத்தப்படுகின்றன.

செந்நீல மேற்கதிர் ஒளியைக் காண முடியாததலால் இதைக் கருப்பு ஒளி என்று கூறுவதும் உண்டு. இது புகைப்படச்சுருள் ஒளி ரும் திரை (Flourescent screen) ஆகியவற்றில் பட்டால் மின்னும் ஒளியை உண்டாக்கும். ஆகையால் இவ்வொளியை நாடக அரங்கங் களில் இருள்படர்ந்த அமைப்பிலுள்ள காட்சிகளை மின்ன வைப்பதற் காகப் பயன்படுத்துகிறார்கள். இக் கருப்பு ஒளி சில நோய்களைக் கண் டறியவும் பயன்படுகிறது. நோய்ப்பட்ட இடம் சில நேரங்களில் பொதுவான ஒளியில் தென்படாது. இதைக் கருப்பு ஒளியைக் கொண்டு கண்டுபிடித்து விடலாம். பல் மருத்துவர் நல்ல பல் எது, சொத்தைப்பல் எது என்று இவ்வொளியைக் கொண்டு கண்டுபிடித்து

விடலாம். உணவுப் பொருள்கள் நல்லவையா, கெட்டவையா என்பதையும் கண்டுகொள்ளலாம். நல்ல முட்டை, இக் கருப்பு ஒளியில் சிவப்பாகத் தோன்றும். கெட்ட முட்டை கருஞ்சிவப்பாகத் தோன்றும். இதே போல் மற்றும் பல உணவுப் பொருள்களைப் பற்றியும் தெரிந்து கொள்ளலாம். செந்நீல மேற் கதிர்களின் முன், பல வகையான தாள்கள், மைகள், வண்ணம் ஆகியவை தனித்தனியான ஒளியுடன் மின்னும். இதைக் கொண்டு, தப்பான இறுதி முறிகள், பொய்க் கையொப்பம், போலிப் பணம் ஆகியவற்றைத் தெரிந்து கொள்ளலாம்.

இயல்பான கண்ணாடியின் ஊடே செந்நீல மேற்கதிர்கள் செல்வதில்லை. ஆனால் படிகக் கல்லின் (Quartz) ஊடே செல்லும். படிகக் கல்லைப் பயன்படுத்திச் செய்யப்பட்ட புகைப்படப் பெட்டியைப் பயன்படுத்திக் கருப்பு ஒளியில் புகைப்படம் எடுக்கலாம். இவ்வமைப்பு செந்நீல மேற்கதிர் நுண் பெருக்காடி (Ultra violet microscope)யில் பயன்படுகின்றது. இக் கருவியைக் கொண்டு உயிர்மங்களின் (Cells) வளர்ச்சியையும், உயிர்மங்களின் பிரிதலையும் தெரிந்து கொள்ளலாம். இதுபோன்ற ஆராய்ச்சி புற்று நோயை எதிர்த்துப் போராடப் பயன்படும்.

4. வானொலி அலைகள் Radio Waves)

வானொலிப் பெட்டியைப் பயன்படுத்தி, நாம் பல்லாயிரக் கணக்கான கற்கள் தொலைவிலுள்ள இடங்களிலிருந்து ஒலிபரப்பாகும் இசை, பேச்சு, நாடகம், முதலியவற்றை நம் இல்லத்தில் அமர்ந்துகொண்டு கேட்டு இன்புறுகின்றோம். இவ் வொலியானது கண்ணுக்குப் புலனாகாத ஒளியால் கொண்டு வரப்படுகின்றது. வானொலி அலைகள் (Radio waves) மின் காந்த அலைகளே. இவை வண்ணமாலையின் நீள முனைக்குப் பக்கத்தே இருக்கின்றன. வானொலி அலைகளும, தொலைக்காட்சி அலைகளும் (Television waves) 100 சீர்கோலுக்குக் குறைவான அலைநீளத்தை உடையனவாக இருக்கின்றன.

வானொலி அலைகள், உலகம் தோன்றிய நாள் முதலே நம்மைச் சுற்றியுள்ளன. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் பல அறிவியலார் மின்சாரத்தைப் பற்றியும், காந்தத்தைப் பற்றியும், ஆராய்ச்சிகள் பல நடத்திக் கொண்டிருந்தனர். 1864-இல் சேம்சு மேக்சுவெல் (James Maxwell) என்பவர் மின் காந்த அலைகளைப் பற்றிய

கோட்பாட்டை வெளியிட்டார். அதில் மின் காந்த இறக்கம் (discharge) செய்து மின் காந்த அலைகளை உண்டாக்கலாம் என்று குறிப்பிட்டிருந்தார். இவருக்குப் பிறகு 20-ஆண்டுகளுக்குப் பின் என்ரிச் எர்ட்சு (Heinrich Hertz) என்பவர் மேக்சுவெல்லின் கோட்பாட்டை ஆராய்ச்சி மூலம் சரி பார்க்கத் துணிந்தார். அவர் இரண்டு கம்பிச் சுருள்களை அமைத்தார். ஒன்று தொடர்ச்சியாக ஒளிப்பொருள்களை (sparks) உண்டாக்கியது.

இப்பொறிகள் வானொலி அலைகளை உண்டாக்கின. இவ்வலைகளை மற்ற சுருள் இழுத்துக் கொண்டது. இதுதான் முதல் வானொலி அலைகள் அனுப்பும் கருவியும், வாங்கும் கருவியுமாகும். எர்ட்சு 1891-இல் இறந்தார். 1890-இல் பிரான்சு நாட்டைச் சேர்ந்த 'எட்வர்டு பிரான்லி' (Edouard Branley)யும், சர் ஆலிவர் லாட்சு (Sir. Oliver Lodge) என்ற ஆங்கிலேயரும் வாங்கும் குழாய் ஒன்றைச் செய்து ¼ கல் தொலைவிற்கு வானொலி அலைகளை இழுத்தனர்.

விநாடிக்கு 1,86,000 கற்கள் வேகத்தில் செல்லும் கதிர்கள் ஏன் மிகக் குறைந்த தொலைவு வரைதான் வருகின்றன என்று உருசிய அறிஞர் அலெக்சாண்டர் பாபோவ் (Alexander PoPov) வாங்கும் கருவிக்கு முன் ஒரு 'மின் அலைவாங்கி' (Antamna) என்ற அமைப்பினைச் சேர்த்து மிகத் தொலைவிலிருந்து அலைகளை இழுக்கும்படி செய்தார். 1895-இல் இதாலியைச் சேர்ந்த குக்லியல்மோ மார்கோனி (Guglielmo Marconi) என்பவர் ஒலி பரப்புக் கருவியுடன் 'மின் அலை செலுத்தி' (Antamna)யை இணைத்து, ஒருதிருப்பத்தை உண்டு பண்ணினார். 1896-இல் 2 கற்கள் தொலைவிற்குச் செய்தியை அனுப்பினார். 1901-இல் அட்லாண்டிக் கடலுக்கப்பால் செய்திகள் அனுப்பப் பட்டன. வெற்றிடக் குழாய் கண்டுபிடித்த பிறகு பல நிகழ்ச்சிகள் ஒலி பரப்ப ஏதுவாயிற்று. முதல் இசை ஒலிபரப்பு 1906-இல் நிகழ்ந்தது. அதன்பிறகு மிக வேகத்தில் இது வளர்ந்து இன்றைய நிலைக்கு வந்துள்ளது.

ஒலி பரப்பப்படும் நிலையத்தில் ஒலி அலைகள் ஒலிபெருக்கியின் மூலம் வானொலி அலைகளாக்கப்பட்டுப் பிறகு பெரிதாக்கப்பட்டுக், காற்றில் செலுத்தப் படுகின்றன, இவ்வலைகளை வானொலிப் பெட்டிகள் இழுத்து மின்காந்த அலைகளை ஒலி அலைகளாக மாற்றுகின்றன.

வானொலி அலைகள், நிகழ்ச்சிகள் ஒலி பரப்பமட்டும் பயன்படுத்தப்படவில்லை. வானொலித் தொலைபேசி மூலம், ஒருவருக்கொருவர் பேச முடிகின்றது. விண் மீன்களிலிருந்து வரும் வானொலி அலைகளை வானொலித் தொலைநோக்கிகளின் மூலம் இழுத்து, அவைகளைப் பற்றிய ஆராய்ச்சிகள் நடத்தப்படுகின்றன. விண்வெளி ஆராய்ச்சியிலும் இது மிகுதியும் பயன்படுகின்றது. செயற்கைக் கோள்களிலிருந்து செய்திகளைப் பெறவும் இது பயன்படுகின்றது.

5. நுட்ப அலைகள் (MICRO WAVES)

வானொலி அலைகளிலே மிகச்சிறிய அலைகள் "நுட்ப அலைகள்" (Micro Waves) எனப்படும். இவற்றின் அலைநீளம் 0.04 பதின் சிறுகோலிலிருந்து 3 சீர்க்கோல் (மீட்டர்) வரை இருக்கும். நீளமான அலைகள் செய்ய முடியாத பல வேலைகளை இவ்வலைகள் செய்கின்றன. 'இராடார்' (Radar) என்னும் தொலைவுணர் கருவியில் இவ்வலைகள் பயன்படுகின்றன. உட்குழிவான, தட்டுபோல் அமைந்துள்ள மின் அலை செலுத்தியின் மூலம் நுட்ப அலைகள் செலுத்தப்படுகின்றன. இவ்வலைகள் எவையேனும் பொருள்களின்மேல் பட்டதும் திரும்பி வருகின்றன இவ்வலைகள் திரும்பிவரும் நேரத்திலிருந்து பொருள் இருக்கும் தொலைவையும் இருக்கும் திசையையும் தெரிந்துகொள்ளலாம். இதைப் பயன்படுத்தி விண்ணில் எதிரிகளின் ஊர்திகள் முதலியவை வரும் பாதையையும் திசையையும் தெரிந்து கொள்ளலாம். இரண்டாம் உலகப் போரின்போது இது மிகுதியாகப் பயன்பட்டது.

இருள்படர்ந்த நேரங்களிலும், மூடுபனி இருக்குப்போதும், மிகுந்த மழை பெய்யும்போதும் கப்பலில் உள்ளோர் 'இராடார்' மூலம் மிகத் தெளிவாக எதிரில் வரும் மற்ற கப்பலையோ வானூர்தியையோ தெரிந்து கொள்ளலாம். எதிரில் உள்ள கரையோரத்தையும், மலையையும் பனிக்கட்டிப் பாறையையும் தெரிந்து கொள்ளலாம். எத்திசையிலிருந்து புயல் வருகின்றது என்பதையும் அறிந்து கொள்ளலாம் இராடாரைப் பயன்படுத்திப் பருவநிலை மாற்றத்தையும் அறிந்துகொள்ளலாம். விண்வெளி ஆய்வுகளிலும் 'இராடார்' மிகவும் பயன்படுகிறது. நிலத்திலிருந்து விண்மீன்களின் தொலைவையும் இதைக்கொண்டு தெரிந்து கொள்ளலாம். வானநூல் அறிஞர்கள் அனல் விண்மீன்களின் வேகம், வருந்திசை ஆகியவற்றை இராடார் மூலம் தெரிந்து கொள்கின்றனர்.

கல்வித் தமிழ்

பேராசிரியர். க. ப. அறவாணன்.

வளர்ந்துவரும் குமுகாயத்தில், அதன்ஊடே வளர்ந்துவரும் மொழிபற்றியும் அவ்வப்போது அறிவதும் ஆய்வதும் இன்றியமையாதன. சிறப்பாக, நூற்றுக்கு மேற்பட்ட ஆண்டுகள் அயலார் ஆளுகை வெப்பத்தில் வாடிக்கொண்டிருந்து விடுதலை பெற்ற இந்தியா போன்ற நாடுகளில், மேற்கண்ட பார்வை இரட்டிப்பு இன்றியமையாமையை ஈர்க்க வேண்டும். அவ்வீர்ப்பே செயலாக மலரவேண்டும். தமிழைப் பொறுத்தவரை, அதனது வளர்ச்சி தமிழனது வளர்ச்சியோடும் தளர்ச்சியோடும் பின்னிக் கிடக்கிறது. தற்போது, தமிழ், கல்வித்துறையில் பெற்றுள்ள இடம் பற்றி எண்ணிப் பார்க்கவேண்டிய-செயலாற்றவேண்டிய காலக்கட்டமும் வந்துவிட்டது. அவ் வெண்ணமும் செயலுமே தமிழின் வளர்ச்சியை விரைவுபடுத்தும். தமிழின் வளர்ச்சித் திட்டங்கள் தமிழனின் வளர்ச்சித் திட்டங்களுக்கு எதிரானவை

(முன்பக்கத் தொடர்ச்சி)

நுட்ப அலைகள் நோய் நுண்ணுயிரிகளைக் கொல்லவும் பயன் படுகின்றன. நுட்பஅலைக் கதிர்வீச்சின மூலம், செடிகளைப் பாழ்செய்யும் உயிரிகளைக் கொல்லவும், மாந்தர்களைத் தாக்கும் சிறிய நுண்ணுயிரிகளைக் கொல்லவும் முடிகின்றது. மண்ணுக்கடியில் புதைந்து கிடைக்கும் கனிவளத்தை நுட்ப அலைகளைக்கொண்டு எளிதில் கண்டுபிடிக்கலாம்.

மருத்துவர்களும் இவ்வலைகளைப் பயன்படுத்திச் செய்யப்பட்ட கருவியைக் கொண்டு சிலவகையான வலிகளைக் குணப்படுத்துகின்றனா நோய்ப்பட்டுள்ள தசைகளைக் காணவும், பல நோய்களை அலசி அறிந்து கொள்ளவும் நரம்புத்தளர்ச்சியைக் குணப்படுத்தவும் நுட்ப அலைகள் பயன்படுகின்றன.

இன்னும் சில நாட்களில் நுட்ப அலைகளைக் கொண்டு நொடிப் பொழுதில் உணவுகளைச் சமைக்கும் கருவிகள் செய்யப்பட்டுவிடும். தட்டுகள், கரண்டிகள் கழுவிவைப்பதற்குள் உணவு சமைக்கப்பட்டு விடும் நாள் தொலைவிலில்லை.

(தொடரும்)

என்ற நச்சுணர்வு படர்ந்துள்ள காலம் இது. அதனால்தான், தமிழ்ப் பயிற்சி மொழித்திட்டம், தமிழனின் கல்வித்தரத்தைக் குறைக்கும் என்ற தப்புணர்வும், மாணவரின் கல்வித்தரத்தைக் கூட்ட, கல்லூரியில் தமிழ்ப்பாடப் பிரிவை (இரண்டாம் பிரிவை) அகற்ற வேண்டுமென்ற பிழை உணர்வும் தோன்றி உள்ளன. தன்னுரிமை பெற்றவுடன் தமிழ் உரிமை பெறும், பெருமை பெறும் என்ற நம்பிக்கை கருகிவிடுமோ என்ற கட்டத்தில், கல்வித் துறையில், இன்று தமிழ் பெற்றுள்ள நிலைகளை ஆய்வது தவிர்க்க முடியாதது.

இக்காலக் கல்வித்துறையை மூன்று பிரிவாகப் பிரித்துக் கொள்ளுவோம். முதற்பிரிவு: தொடக்கக்கல்வி; இரண்டாம்பிரிவு: இடைநிலைக்கல்வி (S. S. L. C. வரை); மூன்றாம்பிரிவு: கல்லூரிக் கல்வி; மூன்றாம் பிரிவான கல்லூரிக்கல்வி, கலையியல் (Arts) அறிவியல் (Science) பொறியியல் (Engineering) தொழிலியல் (Technoloy) மருத்துவ இயல் (Medicine) வணிகஇயல் (Commerce) குமுகாயவியல் (Sociology) எனப் பல பிரிவுகளாகப் பிரிந்து கிடக்கிறது. இத்துறைகளில் தமிழுக்கு இருக்கின்ற இடமும், இருக்கவேண்டிய இடமும் பற்றித் தெரிந்து கொள்ளல் வேண்டும்.

இன்றைய நிலையில் தொடக்கக் கல்வியை ஆங்கிலத்தில் பயின்று, உயர்நிலைக் கல்வியையும் ஆங்கிலத்திலேயே பயின்று கல்லூரியிலேயும் தமிழைப் பயிலாமலேயே ஒருவன் பட்டம் பெற்றுவிட முடியும். கல்லூரியில் தமிழ் பயிற்றுமொழியாக இல்லாதது மட்டும் காரணமன்று. பட்ட வகுப்பில் மூன்று பாடப் பகுப்புகள் உள்ளன. முதற்பிரிவு: ஆங்கிலம்; இரண்டாம் பிரிவு: முதற்பிரிவில் பயிலாத மொழி; (தமிழ்தான் என்ற கட்டாயம் இல்லை;); மூன்றாம் பிரிவு: பொருளியல், பயிரியல், உயிரியல் முதலாயின இப் பகுப்புப் பாடங்களுள் முதற்பிரிவில் ஆங்கிலம் பயின்று, இரண்டாம் பிரிவில் தமிழே பயிலாமல் இந்தி போன்ற மொழிகளைப் பயின்று வெளியேறும் பட்டதாரிகள் பலர் உளர். தமிழரின் திறைப் பணத்தை உரமாகக் கொண்டு, தமிழ்நாட்டில் நடைபெறும் பல்கலைக் கழகங்கள்தாம், தமிழே பயிலாமல் பயிற்றுவிக்கும் பட்டதாரிகளை இன்று உருவாக்கிக்கொண்டு

வருகின்றன. இளங்கலை இயல், (B.A.) இளம் அறிவியல் (B. Sc.) வகுப்புகளில் மட்டுந்தாம் தமிழும் பயிலலாம் என்ற நிலை உள்ளது. அந்த வகுப்புகளில் பணியாற்றுவோர்தாம் இன்றைய ஆயிரக்கணக்கான தமிழ்ப் பேராசிரியர்கள். வேடிக்கை என்னவென்ருல், மாந்தரோடு மாந்தராகக் கலந்து மொழியாலும் வழியாலும் உறவாடும் வாணிக இயல் (B. Com) பட்டத்திற்குத் தமிழே வேண்டியதில்லை. ஆனுல் இந்தி கட்டாயப் பாடமாம். தமிழ் பேசும் மாந்தரின் நோய்கண்டு நோய் முதல்கண்டு அது தணிக்கும் வாய்நாடி வாய்ப்பச்செய்யும் மருத்துவர்கள் (M B. B. S.) இருக்கிருர்களே, அவர்கட்குத் தமிழ்ப் பாடமே தேவை இல்லை. ஆனுல் ஆங்கிலம் கட்டாயப்பாடமாம். நாட்டு உழைப்பாளி மக்களோடு உறவாடி, அணைகளையும் ஆலைகளையும் உருவாக்கவேண்டிய பொறிஞர்கட்கு (Engineers), தமிழ் படிக்க வேண்டிய தொல்லையே இல்லை. ஆனுல் ஆங்கிலம் படித்தே யாக வேண்டும். தாய்மொழியைப் பேச்சளவில் மட்டும் அறிந்து நாட்டுப் பசிப்பிணியைப் போக்கும் பசிப்பிணி மருத்துவர்களாம் உழவர்களோடு ஒட்டி உறவாட வேண்டிய உழவியல் பட்டதாரிகள் (B. Sc Agriculture) தாய் மொழியை ஏறெடுத்தும் பார்க்க வேண்டா. ஆனுல் ஆங்கிலத்தைத் தனிப் பாடமாகவே பயின்ருக வேண்டும். இவைபோன்றே பி. எல், பி. டி. போன்ற பட்டதாரிகள் தாய்மொழி அறிவில்லாமலே, தாய்நாட்டுப் பல்கலைக் கழகங்களில் உருவாக்கப்படுகிருர்கள்.

ஆக, இளம் இயல் (Bachalor) பட்டம் பெற விழையும் ஒருவன், தமிழ் பிறந்த இத்திரு நிலத்தில் முதலாம் வகுப்பினின்று தமிழே பயிலாமல் பல பட்டங்களைப் பெற்றுவிட முடியும். தற்போது முதல்வகுப்பு முதல் பட்டக்கல்வி வரை. தமிழ் பெற்றிருக்கும் தலையாய இடம் இவ்வளவே!

பட்டப்படிப்பு முடிந்தவுடன் பட்ட மேற்படிப்பு நிலையங்கள்' தமிழ்நாட்டு முப்பெரும் பல்கலைக் கழகங்களிலும் உள்ளன. முதுகலையியல் (M. A), முது அறிவியல் (M. Se), முதுபொறியியல் (M. E), முது வணிகவியல் (M. Com), என்று பாடவகுப்புகள் பல்வேறு துறையிலும் விரிந்து கிடக்கின்றன. வேடிக்கை என்னவென்ருல் பட்ட மேல்வகுப்பு படிக்கும் மாணவன், தமிழைப் பயிலவே வேண்டா. தமிழின் எழுத்தறிவும், பேச்சறிவும் இல்லா

எத்தனையோ பட்டதாரிகளை நம் பல்கலைக்கழகங்கள் வெளித்தள்ளிக் கொண்டிருக்கின்றன. அவற்றுள் இரண்டுமட்டும் விலக்கு; அவை எம். ஏ. (தமிழ்) எம். ஓ. எல். (தமிழ்) என்பன. அகநானூற்றையும், புறநானூற்றையும் இன்னும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து முடிக்கவில்லை! முடித்துவிட்டால் எப்படியோ?

ஆங்கிலேயன் காலத்தில் பட்டப் படிப்பில் முதற்பிரிவாக (1 Part) ஆங்கிலத்திற்கு (தம் தாய்மொழிக்கு) முடிசூட்டி இருந்தார்கள். இரண்டாம் இடத்தை, மற்ற அடிமை மொழிக்கு (Vernacular) வழங்கி இருந்தார்கள். இந்தியா தன்னுரிமை பெற்றவுடன் அடிமை மொழிகள் முதல் இடம் பெறும் என்று எதிர் பார்த்தோம்; ஏமாறினோம். இன்றும் அதே நிலை நீடிக்கிறது. தாய்மொழியிலேயே பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்ற காந்தியக் கொள்கை செயலாற்றப்படுமென நினைத்திருந்தோம்; ஏமாறினோம். முடிவில் தமிழ்மொழி தன் நிலையை, தொடக்கப்பள்ளி முதல் தொழிற்பள்ளிவரை, இழந்து தவிக்கும் இழிநிலை தொடர்ந்தது. இந்த நிலையில், தமிழ்நாட்டின் கல்வித்தரம் தாழ்ந்துவிட்டதே, தாழ்ந்துவிட்டதே என்று முதலைக் கண்ணீர் வடிக்கப்பட்டது. ஆங்கிலத்தின் தரம் குறைந்துவிட்டதே என்று தமிழ்நாட்டு ஆங்கிலேயர்கள் சிலர் (பொறுத்துக் கொள்ளவும்! தமிழர்கள்தாம்) புலம்பினார்கள்.

இந்தியாவின் பல்கலைக்கழகக் கல்வி உருவானதிலிருந்து இன்றுவரை, பாடம் பயிற்றுவிக்கும் மொழியாக ஆங்கிலமே இருந்து வருகிறது. ஏறத்தாழ நூறு ஆண்டுகட்குமேல் பயிற்றுமொழி ஆங்கிலமே இருந்ததன் பயன்: இந்தியாவில் அறிவியல், தொழிலியல், மருத்துவ இயல் முதலான துறைகளில் நோபல்பரிசு மேதைகள் பலர் உருவாகாமல் போனதுதான். இந்த அறிவு வறட்சிக்குக் காரணம், உணரவும் உணர்த்தவும் வல்லதான தாய்மொழி பயிற்றுமொழி ஆகாமையே என்று அறிஞரால் எடுத்துக்காட்டப்பட்டது. அறிஞர்களின் இடித்துரை, தாய்மொழி தக்க பருவம் அடையவில்லை என்று இத்தரகர்களால் தடுக்கப்பட்டது; ஒடுக்கப்பட்டது.

என்றாலும் கல்வித்தரத் தாழ்ச்சிக்கான காரண ஆராய்ச்சி நின்றுவிடவில்லை; நீடித்தது. நீடித்த ஆராய்ச்சியினின்று பிடித்த எண்ணம் ஒன்று முகிழ்த்தது. கல்லூரி நிலையில் உள்ள தமிழை எடுத்துவிட வேண்டுமென்பதே அது. தமிழ் எங்கேயிருக்கிறது என்று கேட்டுவிடாதீர்கள்! தமிழையும் பயிலலாம் என்று ஏலத்

துக்கு விடப்பட்ட நிலையில், பட்டவகுப்பு இரண்டாம் பிரிவிலுள்ள தமிழ்ப்பாட வகுப்புகளை எடுத்துவிட வேண்டும். அதற்கு மாறாக, அப்பிரிவில் பாடங்கள் (Subjects) பயிற்றுவிக்கப்பட வேண்டு மென்ற புதுக்கொள்கை முளைத்தது. இந்தத் திட்டம் நிறைவேறு மானல் அறிவியல் மே(பே)தைகள் அளவிறந்து தோன்றி. தமிழ் நாட்டை வாழ (சாக) வைப்பார்கள் என்று ஆவல் காட்டப்படு கிறது.

இங்கேதான் சில ஐயங்கள் —

1. தமிழ்ப் பயிற்சியே இல்லாமல், மருத்துவம், தொழிலியல், பொறிஇயல், வணிக இயல் மேதைகளை இதுவரை உருவாக்கி வந்தீர்கள்! அந்த அந்தத் துறைகளில் எந்த எந்த மேதைகள், எத்தனை எத்தனை நோபல் பரிசுகள் பெற்று இருக்கிறார்கள்? பட்டியல் தேவை!

2. பெரும்பாலும் பட்ட மேற்படிப்பிற்குப் பின்தான் அறிவில் வல்லவர்கள் உருவாகிறார்கள். இப்போதும் பட்ட மேற்படிப்பு அளவில் தமிழுக்குக் கடுகத்துணை இடமும்இல்லையே! தமிழே பாடமாகக் கொள்ளாமல், என்றும், எப்போதும், பாடத்தையே (Subjects) பயின்றார்களே—, பயிலுகிறார்களே! அப்படிப் பயின்றும் வந்துள்ள மேதைகள் எத்தனைப்பேர்?

3. தமிழையும் பயிலாமல், தமிழிலும் பயிலாமல் வருகின்ற மேதைகள், தமிழுக்கும் தமிழனுக்கும் தமிழ் நாட்டுக்கும் என்ன செய்துவிடப் போகிறார்கள்?

4. கல்லூரிக் கல்வியில் ஒட்டிக்கொண்டிருக்குந் தமிழ்ப் பாடங்கள் தமிழை மட்டும் பயிற்றுவிப்பதற்காகக் கொண்டு வரப் பட்டனவல்ல. மாணவப் பருவத்தில், அவர்களின் நெஞ்சவயலில் மெய்யறிவு விதைகளை ஊன்றவும், நாடு, மொழி பற்றிய பற்றை ஊட்டவுந்தான் கொண்டு வரப்பட்டன. மொழி, நாட்டுப் பற்றுக்கு வாய்ப்பில்லாமலும், உள்ள நேர்மை இல்லாமலும் உருவாகும் மாண வரால் குமுகாயம் உருப்படுமா?

இவற்றை எல்லாம் சுட்டிக்காட்டும் போது, இங்கிலாந்து நாட்டுப் பல்கலைக்கழகங்களில் இரண்டாம் மொழிப் படிப்பில்லையே என்று ஊர்சுற்றிகள் சிலர் கூறுகிறார்கள். அஃது உண்மைதான்! ஆனல், இங்கிலாந்தில், அறிவியல் பாடமுதல் அனைத்தியல் பாடங்

களும் தாய்மொழியிலேயே பயிற்றுவிக்கிறார்கள். தம் தாய்மொழி வழிப் பாடம் பயிலுவதன் வாயிலாகத் தம் தாய்மொழியையும் அவர்கள் பயின்று விடுகிறார்கள். ஆனால் இங்கு அதுவா நிலே? தமிழ், பயிற்று மொழியாகவுமிராது; பாடமொழியாகவும் இராது. ஆங்கிலமே பயிற்று மொழியாகவும் பாடமொழியாகவும் இருக்கும். நூறு ஆண்டுகட்குமேல், பயிற்றுமொழியாகவும், பாடமொழியாகவும் இருந்த ஆங்கிலம்—இதுவரை செய்துவிடாத பெருஞ்செயலை இனித்தான் செய்யப் போகிறதா?

தமிழுக்கு வாழ்வு போகிறதே என்ற ஏக்கமன்று. தமிழர்க்கு வாழ்வு போகிறதே என்ற கலக்கம்தான் காரணம். தாய்மொழிப் பயிற்சியால்தான் மேதைகளை உருவாக்க முடியும். மாந்தர் உள்ளத்தில் அறிவு எழுச்சியை உண்டாக்க வல்ல கருவி, தாய்மொழி ஒன்றுதான். அதே போன்று, மாந்தன் முழுக்க முழுக்க இயந்திர மயம் ஆகாமல் அவனை நெறிப்படுத்தி, நேர்ப்படுத்தும் உளமுறை ஆசான், தாய்மொழியாகத்தான் இருக்க முடியும். அறிவையும் உள வளத்தையும் இழக்கத் துணியும் நிலே, இறக்கத்துணியும் நிலேயே. அது வாழவைக்கும் நிலேஅன்று; சாகவைக்கும் நிலேயேயாம்! 0

பார்ப்பான் அவன்!

தி. எழிலரசன்.

கால்கை பிடிப்பான் கணிகையைப் போல்நடிப்பான்
நூல் கைப் பிடித்துமனு நூல்படிப்பான்—ஆலம்போல்
உள்ளத் திருப்பான் உயிரமு தாயினிப்பான்
கள்ளப்பார்ப் பானவன் காண்.

'நூலின'த்தான் என்பார்க்கே நூறு யிரம்புரட்டு;
காலூன்றி மேலெழும்பும் காற்றதனில்—நூலறுந்த
பட்டம்போல் மானம் பறந்தாலும் தன்வினையில்
வட்டமிடும் கண்ணிரண்டும் வந்து.

நெஞ்சினிக்கும் சொற்கள் நமைமயக்கும் நீங்காத
நஞ்சிருக்கும் பார்வை நயமிருக்கும்—கொஞ்சுதமிழ்
ஆவல் மிகுந்திருக்கும் ஆரியப் பார்ப்பார்க்குக்
காவல் அவையாம் கணி.

குடிப்பிறப்பால் தன்னைக் குலத்துயர்ந்தோன் என்பான்
முடிக் கொண்டை போட்டிருப்பான் முட்டை—முடிச்சவிழ்த்துப்
பண்டைப் புளுகைப் படிப்படி யாய்அளப்பான்
அண்டிக் கெடுப்பான் அவன்.

நம்மோ டிணைந்திருப்பான் நம்மையே தாழ்த்திவரும்
வம்போ டவன்பிறப்பான் வையகத்தார்—நம்பும்
படிகல்ல சொல்லுரைத்துப் பாரெங்கும் தன்னோர்க்
கடிகோல்வான் பார்ப்பான் அவன்.

கிழவனுடலில் இளைஞன் உயிர்?

-மணிவேலன்-

1. முறுக்கான இளைஞனுயிர் தலைநரைத்துத் தோற் சுருங்கி
 மோவாய் நீண்டே
இறுக்கமின்றி நரம்பெல்லாம் தளர்வுற்றே எழுச்சியின்றி,
 இலைகள் காற்றில்
தறிகெட்டே ஆடுதல்போல் தலையோடு கைநடுங்கும்
 தாத்தா மெய்யில்
செறிவுற்றே நுழைந்தியங்கச் செய்தாலே அத்துன்பம்
 சொல்ல வாமோ?

2. படக்கென்றே பட்டாணி கடிக்கவெண்ணும் இளைஞனுயிர்!
 பல்லே இல்லை!
வெடுக்கென்றே எழுந்தோடி ஆற்றினிலே நீந்திநீந்தி
 விளையா டற்குத்
துடிக்குமந்த இளைஞனுயிர்! துவண்டுவிட்ட கைகால்கள்
 சோம்பி நிற்கும்!
அடிக்கவரும் எதிரியினை அடக்கடாநீ என்றதட்டி
 அருகி லுள்ள

3. தடியொன்றை எடுப்பதற்குக் குதிக்குமுயிர்! கையிரண்டும்
 தடத டென்று
வெடவெடக்கும்! உள்ளத்தைத் தன்பாலே ஈர்க்கின்ற
 விழிகள் பேசும்
இடுகுமரிப் பெண்பார்த்துச் சிரிக்கையிலே இளைஞனுயிர்
 ஏங்கிக் காதல்
அடைத்தேனைச் சுவைப்பதற்குக் காதலுறும்! யாழ்நரம்பே
 அறுந்த பின்னர்

4. மீட்டுவதும் கூடுவதோ? இக்காட்சி காண்பதற்கு
 வெட்கக் கேடே!
நாட்டினிலே தமிழ்மொழியை ஆங்கிலமாம் எழுத்தினிலும்
 நாட்டை யாளும்
சேட்டுக்கள் மொழியான இந்திமொழி எழுத்தினிலும்
 தெளிவாய்க்(?) கற்க

'ஏட்டையினி மாற்றுங்கள்' எனப்பேசும் பெரியவர்கள்
இதைக்கேட் பாரோ?

5. தமிழ்மொழியைத் தமிழெழுத்தில் கற்கின்ற தமிழ்மகனே
'தமிழ்'என் றற்குத்
"தமிள்"என்று படிக்கின்றான்; "வாழ்க!"வென்றால்
தடுமாற் றத்தால் ["வாள்க"வென்றும்
அமுக்குகின்றான் ஓசையினை! "மறம்"என்றால் "மரம்"
அழகைக் கொல்லத் [என்றே
தமிழ்சிதைத்துப் பேசுகின்றான்! பிறவெழுத்தில் தமிழ்
தமிழே சாகும்! [கற்றால்

6. வல்லெழுத்தும் மெல்லெழுத்தும் இடையெழுத்தும்
ஒலிக்கும் போதில் [பிரிவறிந்தே
சொல்லழகும் பொருளழகும் தோன்றுகின்ற புதுமை
சிதைந்து போகும்! [யெல்லாம்
"கல்"லென்றால் "கள்"ளென்றும் "வாள்" என்றால் "வால்"
கழறும் போதும் [என்றும்
சொல்லுக்கே அழகூட்டும் 'ழகர'ஒலி கெடும்போதும்
சொட்டும் கண்ணீர்!

7. 'மழை விழுந்த தென்பதற்கு 'மலை'விழுந்த தென்றினிமேல்
"மாடர்ன் டாமிள்" (Modern Tamil)
மொழியாளர் சொல்வாரோ? நினைக்கையிலே நெஞ்சில்தீ
மூளு மன்றோ?
எழிலுருவாய்த் தோன்றுகின்ற நிலாவுலகை யடைவதற்கே
எடுத்துச் சொல்லும்
குழப்பமுறும் சிக்கலுடை கணக்கெனினும் அதைவெறுக்
குள்ளர் யாரே? [கும்

8. "சார்புநிலைக் கொள்கை"யினைச் சரியாகப் புரிந்துகொள்ளப்
பன்னி ரண்டே
பேருள்ளார் இவ்வுலகில்! அவ்வளவு பெருஞ்சிக்கல்!
பெரியோர் இந்தச்
சார்புநிலைக் கொள்கையினைத் தூவென்றே இன்றைக்குத்
தள்ளி விட்டே

மக்கள் தொகைப் பெருக்கமும் நமது பொருளியல் அமைப்பும்

ந. பெருந்தேவன்.

தாமசு இராபர்ட்டு மால்தசு என்ற 'வழிவழி வரும் பொருளியல் வல்லுந (Traditional economist) ரின் கூற்றுப்படி, "உணவு விளைச்சல் மெள்ள மெள்ளக் கூட்டுத் தொகையில் கூடிச் செல்கிறது. ஆனால் மக்கள் தொகையோ அவர்களே விரும்பி நடவடிக்கை எடுத்தால் ஒழிய வெகுவிரைவில் பெருக்கல் முறையில் பெருகிச் செல்கிறது. (By nature human. food increases in a slow arithmetical ratio; man himself increases in a quick geometrical ratio unless want and vice stop him)" 'மால்தசின் கொள்கை' பல 'புதுக்கூற்று புகுத்தும் பொருளியல் வல்லுநர்'களால் (Modern-economists) எதிர்க்கப்பட்ட போதிலும், இக்கட்டுரையில் விளக்கப்

(முன்பக்கத் தொடர்ச்சி)

'ஈரண்டு .. நான்கெ'ன்னும் வாய்பாடே போதுமென்றே
இருப்பர் தாமோ?

9. ஒரொலியைக் காட்டுதற்கே பலவெழுத்தைச் செறித்தா
ஒத்த ஓசை [லும்
தாராமல் தடுமாறும் ஆங்கிலத்தின் எழுத்தினிலே
தமிழைக் கற்க
யாராலே ஆகுமிது? இருக்கின்ற ஒலியனைத்தும்
எழுதிக் காட்ட
வாருங்கள் திறமிருந்தால் யாரேனும்? குறைபாட்டை
வளர்க்க வேண்டா!

10. தமிழ்மொழிக்கு நெடுங்கணக்கே நெடிதென்று நெடியேறித்
தாக்கு வோர்கள்
அமிழ்கின்ற கப்பலுக்குச் சிறுபொத்தல் அடைப்பதற்கே
ஆற்ற லின்றி
அமிழ்ந்தொழியச் செய்துவிட்டுப் புதுக்கப்பல்-ஓட்டை
அழகுக் கப்பல்(!) [யுள்ள
'இமைப்போதில் வாங்கிடலாம்' என்கின்றார்! இதனாலே
என்ன நன்மை?

போகும் உண்மைகளுக்காக, மால்தாசின் மேற்கோளை அடித்தளமாக அமைத்து அதன்மேல் சில கருத்துகளை எழுப்பவிருக்கின்றேன்.

நம் நாட்டில் மக்கள் தொகை பெருகிவருகிறது. இஃது உண்மை தான். அதனால்தான் நாட்டுமக்கள் துன்புறுகிறார்கள், உணவு வுடையின்றி என்று கூறுகிறார்களே அது பொய். நம்நாட்டில் உணவு விளைவு மக்கள் தொகை பெருகிய அளவிற்குப் பெருகவில்லை. இஃது உண்மைதான். அதனால்தான் நாட்டுமக்கள் துன்புறுகிறார்கள். பசியாலும் பட்டினியாலும் என்று கூறுகிறார்களே அது பொய். பின் எதனால்தான் நாட்டுமக்கள் துன்புறுகிறார்கள் என இனி எண்ணிப் பார்ப்போம்.

தற்போது நமது கடமை மக்கள் தொகைப் பெருக்கத்தைக் குறைப்பதா அல்லது உணவு விளைவின் சுருக்கத்தைப் பெருக்குவதா? பலர் மக்கள் தொகைப் பெருக்கத்தைக் குறைக்க வேண்டுமென்பர். அதைவிட உழைக்காதுண்போர் தொகைப் பெருக்கத்தைக் குறைக்க வேண்டுவதே நமது முதல் கடமை. உருசிய நாட்டு அரசியல் அமைப்பின்படி உழைக்காதவன் உண்ணாநோன்பே கைக்கொள்ள வேண்டும். உண்ணாநோன்பென்றுரைத்து ஊரை ஏமாற்ற முடியாது அங்கே! தற்போது நம் நாட்டில் உழைப்போர் தொகை குறைந்தும், மக்கள் தொகை நிறைந்தும் வருகிறது. மக்கள்தொகைப் பெருக்கம் நாட்டுக்கு நலன் பயக்கும் என்பதையே சான்றுடன் நிறுவ விழைகின்றேன்.

மக்கள் தொகை பெருகப் பெருக, பெரிய பெரிய கருவிகளின் உதவியை நாடாது நாமே உடலால் உழைத்துத் தொழில் நடத்தலாம். ஆகையால் நாம் வெளிநாட்டிலிருந்து கடனாகவோ அல்லது காசு கொடுத்தோ பல கருவிகளை வாங்குவது தேவையற்றதே. அது நமது சோம்பலையும் உடல்வளையா உளத்திமிரையுமே காட்டுகின்றது. இதற்கு இதோ ஒரு சான்று:-

கைக்குத்தல் அரிசி:— இதனால் உடலிற்கு நன்மை இருப்பதை நோக்குவதோடு ஈண்டுப் பொருளியல் நன்மையையும் நோக்குவோம். இஃது உடலுழைப்பை வேண்டுகிறது. இதனால் முன்பு எவ்வளவு மக்கள் வேலை பெற்றுத் தங்கள் நாளை ஓட்டிவந்தனர்! இப்போது நாம் மேலைநாட்டைப் பார்த்து மின் கருவிகளை வைத்துக்கொள்வதால் அவ்வளவு மக்களும் வேலையின்றித் திண்டாடுகிறார்கள். வேலையில்லாமல்

இருந்தால் மாந்த அறிவின் நாட்டம் தீச்செயல் நாட்டமாகிவிடும். இது பல அறிஞர்களும் ஏற்றுக்கொண்டதோர் உண்மை. ஆகையால்தான மக்கள் தொகை பெருக்கம் கேடு விளைவிப்பதன்று. உழைப்போர் தொகைச் சுருக்கமே கேடுவிளைவிப்பதாகும். மேலைநாட்டைப் பார்த்து உழவுத்துறையில்கூடக் கருவிகளின் உதவியை நாடுவது இந்திய உழவுத்துறை பொருளியல் அமைப்(Agricultural Economic Structure)பிற்கு ஒவ்வாதது. ஏனெனில் இன்று நேர்மையான வேலை கிடைக்காதவர்கள் குறுக்கு வழியில் பொருளீட்ட முனைகின்ற ஒரு சீர் கேடான நிலை இருந்து வருகிறது. நாட்டிலுள்ள பெரும்பான்மையான மக்கள் எல்லோரையும் உழவுத் துறையால் பிழைக்கச் சொல்லி ஊக்கு விக்க வேண்டும். உழைப்பவனுக்கே நிலம் உரிமை (Peasant-Proprietorship) என்ற நாள்வரும்வரை' செல்வர்களிடம்சேர்ந்துள்ள அளவுக்கு மீறிய செல்வம் ஏழைகள் கைக்கு வராததோடு நாட்டிலே மக்களாட்சி வழிநின்ற நிகரமை (Socialism) மறைந்து 'தடியாட்சி வழி நின்ற தனியுடைமை' (Autocratic Capitalism) வந்துவிடும். தனியுடைமை (Capitalism)க் கொள்கைக்கெனக் கட்சி தொடங்கிய இராசாசியைப் பின்பற்றும் பார்ப்பன அடிவருடிகள் இதை உணர வேண்டும்.

உடலுழைப்பை எல்லோரும் எப்படி மேற்கொள்வது? உழைப் போர் தொகை பெருக வெண்டுமானால் அஃது எப்படி முடியும் என்கி றீர்களா? ஆரியப் பார்ப்பனன் வயலில் இறங்கி உழைப்பானா? குமு காயத்தில் உள்ள 'கீழ்நிலை(சூத்திர), மக்கள்' தானே வயலில் உழைக்க வேண்டும் என்கிறீர்களா? இந் நாட்டில் உள்ள ஒவ்வொருவனும் ஆண்டியாயினும் அரசனாயினும் உடலை வளைத்து உழைத்தாக வேண் டும். அறிவுழைப்பைச் செய்கிறானே! அவனுமா உழைக்க வேண்டும் என்கிறீர்களா? அறிஞர் யாரேனும் ஒருசிலர் தாம் நாட்டில் இருக்க முடியும். ஆகையால் அறிவுழைப்பு என்று கூறி ஏமாற்றி உடலு ழைப்பை ஒதுக்கி ஊரை ஏமாற்றலாம் என நினைப்பவர் எல்லோரை யும் சிறையில் அடைக்கவேண்டும்; செக்கிழுக்கச் சொல்லவேண்டும். செய்யவில்லையென்றால் சாட்டையடி கொடுக்கவேண்டும். ஆகவே மக்கள் தொகைப் பெருக்கமன்று நாட்டை வாட்டுவது; உழைப்போர் தொகைச் சுருக்கமே இன்று நாட்டை வாட்டிவருவது என்பதை மீண் டும் வலியுறுத்துகின்றேன். உழைப்போர் தொகைச் சுருக்கத்தைக் குறைத்தால், வயலில் இறங்கி உழைப்பார்களே பலர்! பின் உணவு விளைவு பெருகுமே! பின்னர் நாம் மேன்மேலும் உழைப்போர் தொகைப்

பெருக்கத்தை ஊக்குவிப்பதன் மூலம், வெளிநாடுகளிடம் உதவியை நாடி ஏங்கும்இரங்கத்தக்க நிலையைச் சிறிதுசிறிதாகப் போக்கிக்கொள்ளலாம். ஆனால் இன்று உடலுழைப்பிற்கு மாறாகக் கருவியைப் பயன்படுத்தும் நிலையினும் சீர்கேடான நிலையான அறிவுழைப்பிற்குப் பதிலாகக் கருவியைப் பயன்படுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது. சிலஇந்தியத் தொழிற்சாலைகள் 'வரவு செலவுக் கணக்கு' போன்றவற்றிற்குக் கூட மின் கருவிகளைப் (Computers) பயன்படுத்தத் தொடங்கியுள்ளன. மேலைநாட்டைப் பார்த்து எல்லாவற்றையும் பின்பற்றுவது எவ்வளவு பெரிய தவறு என்பதை நாம் இன்னும் உணரவில்லை; உணரும்நாளும் சேய்மையில் இல்லை!

மேலை நாட்டுப் பொருளியல் கொள்கைகளினின்றும் கொள்ளுவன கொண்டும் தள்ளுவன தள்ளியும் வாழாது, தள்ளுவன கொண்டும் கொள்ளுவன தள்ளியும் வாழ முயற்சி செய்வதன் விளைவும் தெரிந்துவிடும் சின்னாளில்! மேலைநாட்டாரை மேலோட்டமாகப் பார்த்துப் பின்பற்றும் பேதையரின் பேதைமையும் புரிந்துவிடும் சின்னாளில்! நம் நாட்டுப் பெரியோர்களின் கொள்கைகளைப் பின்பற்றி வாழ முயற்சி செய்யாது, அவர்களை வாயளவில் வாழ்த்திவிட்டுச் செயலளவில் தன்னலம் ததும்பும் தரக்குறைவில் தன்னை ஈடுபடுத்துவதோடு நில்லாது பிறரையும் அதற்குப் பயன்படுத்தும் கொடுமையும் அனைவருக்கும் தெரியும் நாள் சேய்மையில் இல்லை.

தென்மொழி-கடலூர்-1.

[உலகத் தமிழ்க்கழகச் செய்திகள் முழுமையாகத் தொடர்ந்து வரும் ஒரே இதழ்]

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம்:	9 உருபா.	10-50 உருபா.	13 உருபா.
தனிஇதழ்:	75 காசு.	90 காசு.	1 உருபா.

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

ஓரிதழுக்கு ஓர் உருபா 50காசு முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

சுறுசுறுப்புள்ளவர்களாகவும், அறிவுக் கூர்மையுள்ளவராகவும் மாற்றியது, சோம்பிக் கிடந்த எங்கள் உள்ளங்களைத் தட்டி எழுப்பிப் புத்துணர்வூட்டியது என்று கூறினால் அஃது எள்ளளவும் புகழ்ச்சியேயில்லை" என்று கூற நான் வாய்திறந்து அவர் கூறுவதைக் கேட்டுக் கொண்டிருந்தேன். பின்னர், அவரை நோக்கி, "ஐயா, அந்த அறிஞர் யார்? அவரைப்பற்றிச் சிறிது யான் அறிந்து கொள்ளலாமா?" என்று ஆவலோடு வினவினேன். "கட்டாயம் உங்கட்குக் கூறுகின்றேன்," என்றவர் ஆசிரியரின் வாழ்வைப் படம்பிடித்துக் காட்டுவதுபோலக் கூறத் தொடங்குகின்றார்:

எங்கள் ஆசிரியரின் பெயர் திராக்டென்பெர்க்கு (Trachtenberg) "ஒடிசா" (Odessa) என்ற ஊரில் 1888-ஆம் ஆண்டில் உருசிய நாட்டில் தோன்றியவர். செயிண்ட் பீட்டர்சு பெர்க்கில் உள்ள பல்கலைக் கழகத்தில் கல்விகற்று, உயர்ந்த பட்டங்கள் பெற்றார். இருபது அகவை முதிரும் முன்னரே உருசிய நாட்டுக் கப்பற்படையின் "தலைமைப் பொறியியலாளர்" (Chief Engineer) பதவி யேற்றுப் பணி புரியத் தொடங்கியவர். "சார்" (Zar) மன்னனின் ஆட்சிக் காலமாகிய அன்று இவருடைய தலைமையில் 11000-மறவர்களைக் கொண்ட சிறந்த கப்பற்படை யொன்றை அமைத்தல் வேண்டும் என்ற எண்ணங்கூட உருசியரிடம் இருந்து வந்ததாம். இவர் படையிலே பணியாற்றி வந்தபொழுதும், போரற்ற அமைதியான வாழ்வில் மிகுந்த விருப்பங்கொண்டவராய்த் திகழ்ந்தார் என்பதை, முதல் உலகப்போர் மும்முரமாக நிகழ்ந்து கொண்டிருந்த பொழுது, அப்போரில் புண்பட்டவர்களுக்குப்பணியாற்றுவதற்கென ஒரு பெருங்குழுவினையேகூட்டிப் புண்பட்டவர்களுக்கு உதவி செய்வதெவ்வாறென்று தாமே அவர்கட்குக் கற்பித்து அவர்களைப் போர்முனைக்கு அனுப்பிவைத்ததிலிருந்து அறிகின்றோம்.

பத்தாண்டுகள் சென்றன, அப்பொழுது உருசிய நாட்டில் "சார்" மன்னனுக் கெதிராகக் கிளர்ச்சியும், புரட்சியும் தோன்றின. மன்னனுடைய குடும்பமே கொலையுண்டது. அந்நிகழ்ச்சி, அறிஞரின் மனத்திலிருந்த அமைதியும் இனிமையும் நிறைந்த வாழ்க்கை வாழ்வோம் என்ற நம்பிக்கையை அடியோடு அழித்தது. அவர், ஒழுங்கின்மையையும், கட்டுப்பாட்டின்மையையும் வன்மையாகக் கண்டித்து அவற்றின் எதிரியாகவும் மாறினார். உருசியநாட்டு மூலைமுடுக்கெல்லாம் புரட்சியா

ளர்கள் மிகுந்திருந்த பொழுதும், அவர்களின் வன்முறைப் போக்கை அச்சம் சிறிதுமின்றி எதிர்த்தார். அவர்காட்டிய அவ்வெதிர்ப்பு அவருடைய உயிர்க்கே இறுதி தேடுவதாக அமைந்தது. 1919-ஆம் ஆண்டு தொடங்கியது. புரட்சியாளர்கள் தம்மைக் கொன்றுவிடுவர் என்பதை உய்த்துணர்ந்த திராக்டென்பெர்க்கு, உழவனைப்போல் வேடம்பூண்டு பகற்பொழுதில் மறைந்து, இரவுப் பொழுதில் பயணத்தை மேற்கொண்டு, உயிர் வாழ்தற்குச் செருமனி நாட்டை நாடினார். ஒளி நிறைந்த சூழலையும், குளிர்ந்த தன்மையையும், அழகிய அகன்ற சாலைகளையும் கொண்ட பெர்லின் நகரம், அவருக்குத் தாம் கல்வி கற்ற பீட்டர்சுபெர்க்கை நினைவூட்டியது. உருவில் சிறியதோர் எளிய அறை அவருடைய இல்லமாகியது. பொய்ம்மைத் தோற்றமில்லாதவரும், அறிவுக்கூர்மை மிகுந்தவரும் முதல் உலகப் போரில் உடல் உறுப்புகளை இழந்து இரங்கத்தக்க நிலையிலிருந்தவருமாகிய இளையோர் பலர் அவருடைய நண்பர்களாயினர். அவரையே தம் தலைவராகவுங் கொண்டனர் அவர்கள். அவ்வூரிலேயே காலூன்றிய அவர், ஒரு தாளிகையின் ஆசிரியராய்த் தம்மை ஆக்கிக் கொண்டார். அதில் உரைகள் பல எழுதிச் செருமனி நாட்டை அமைதியின் வழியில் அழைத்துச் சென்றார். அதே ஆண்டில், அறிவும் ஆற்றலும் நிறைந்த பெண்டிரொருவரை மணந்து கொண்டார். தம் இதழிலேயே உருசிய நாட்டைப் பற்றி அவ்வப்போழ்து ஆய்வுக் கட்டுரைகளை எழுதிவந்தார். அவை அன்னாரின் புகழைப் பெரிதும் ஓங்கச் செய்தன. உருசிய நாட்டின் தொழில் துறையைப பற்றிய செய்திகளை அறிவிக்கும் சிறந்ததொரு நூலாகவும் இக்கட்டுரைகள் தொகுக்கப்பட்டன. இக் கட்டுரைகளின் சிறப்பை நன்குணர்ந்தோர் இவரைப் பெரிதும் போற்றினர். புதியது புனையும் ஆற்றல் மிகுந்த இவருள்ளம் பிறமொழிகளைக் கற்றுக்கொள்ள எளியதொரு வழியை வகுத்தது. அஃது இன்றும், செருமனி நாட்டின் பல பள்ளிகளில் பின்பற்றப்பட்டு வருகின்றது.

இட்லர் (Hitler) செருமனி நாட்டின் தலைமைப்பொறுப்பேற்றார். வன்முறையையும், விரைவுப் போக்கையும் சற்றும் விரும்பாத இவர் இட்லரின் தனிக்கோன்மை (பாசிச)க் கொள்கையைக் கண்டித்து, தம் இதழில் கட்டுரைகள் வரைந்தார். இவருடைய புகழை நன்குணர்ந்திருந்த இட்லர், அவ்வெதிர்ப்பைக் கண்டும், அவர்க்கு ஊறு விளைக்காமலிருந்தான். ஆனால் நாட்கள் செல்லச்செல்ல ஆசிரியரின் கட்டுரைக்

பெற்ற, தெளிந்த, விரைவு முறைகளையே எழுதினார். ஏனென்றால் இத்தகைய தாள்கள் கிடைப்பதே அரிதாக இருந்ததால் கிடைத்ததை மிகவும் ஒழுங்காகச் செலவிட வேண்டியிருந்தது.

நுட்பமாக எண்ணும் ஆற்றலை வளர்ப்பதற்கே கணக்கியல் தான் வழிகோலும் என்று நம்பினார் அவர். அறிவை முற்றிலும் இழந்தவர்களின் நடுவில் நாம் வாழ நேர்ந்தாலும், ஒழுங்கினையும், கட்டுப்பாட்டையும் தம்பால் கொண்ட அமைதி மிக்க "எண்கள்" நெடுநாள் பழகிய பழைய நண்பர்களைப் போன்று துணை செய்யும் தன்மையன என்று, போற்றியே புகழ்ந்தார். தாள்களையும், எழுதுகோலையும் பெறவியலாத நிலையிலிருந்த பொழுது தம்உள்ளத்திலேயே அப்படியும்இப்படியுமாக எண்களை மாற்றி மாற்றி அமைத்து அவற்றிடம் நிலவும் ஒற்றுமைகளையும், வேற்றுமைகளையும் கண்டுணர்ந்தார். மிகப்பெரிய எண்களை மனக்கண் முன்னே கொண்டுவந்து அவற்றைக் கூட்டுவதற்கோர் எளிய வழிகாண முனைந்தார். சின்னஞ்சிறிய குழந்தையானாலும், அறிவற்ற முட்டாளானாலும் பதினொன்றுவரை எண்ணத் தெரிந்த எவரும் எத்தகைய பெரிய நீளமான பட்டியலைக் கொண்ட எண்களையும் கூட்டி மிகவிரைவில் விடையளிக்க வியலுவதான எளியதொரு முறையைக் கண்டார். இந்த முறையால் மிகவிரைந்து கூட்டலைச் செய்கின்றோம் என்பது ஒருபுறமிருக்க, பதினொன்றிற்கு மேலாக எண்களை நாம் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டிய தேவையே இல்லாமற் போய் விடுகின்றது என்பது இம்முறையின் சிறப்பாகும்.

கொடிய நச்சுப் பாம்புகள் நிறைந்த குடத்தினுள் வாழ்வது போல, இட்லரின் சிறைக்கூடத்தில் வாழ்ந்து கொண்டிருந்த பொழுதும், ஒவ்வொரு நொடிப் பொழுதையும் இந்த எளிய முறைக் கணக்கியலை உருவாக்குவதிலேயே, முற்றுப்பெற வைப்பதிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்தார் ஆசிரியர். சிறையதிகாரிகளின் கயமைத்தன்மையும் சாவமைதிநிரம்பியசின்னஞ் சிறிய இருட்டறைகளிலிருந்து வந்த கதறல்களும், உயிர்க் கொடுமை செய்யும் அறைகளினின்று எழுந்த ஒலிகளும், புகை போக்கியிலிருந்தெழுந்த முடைநாற்றமும், சிறைச்சாலையில் நிகழ்ந்த தீச்செயல்களும், சாவின் கொடுமையினை அடிக்கடி

(நினைவூட்டி வந்த அச்சுறுத்தல்களும், அவரின் அன்பிற்கும், அவாவிற்கும் பணிந்து செயலாற்றிய எண்கள் என்னும் பழைய நண்பர்களின் ஆற்றலின் முன்னர் செயலற்றுப்போயின.) அத்தனைக்கொடுமைகளும் அவரை ஏதுஞ்செய்யவியலாதவையாயின. ஆனால் இந்தத் தொல்லைகள் யாவும் அறிவாற்றல் மிகுந்த அவரை விரைந்து செயலாற்றச் செய்தன.

இட்லரிடமிருந்து, 1944-ஆம் ஆண்டு பிறந்த சில நாட்களிலேயே. தம்மைக் கொன்றுவிடுமாறு கட்டளை வந்திருப்பதை அறிந்தார். இனித் தட்புவதும், அக்கட்டளை மாறப் போவதும் இல்லை என்றும் நம்பினார். தம் நிலையை நன்குணர்ந்த அவர் சிறிதும் கலங்காது, தாம் தொடங்கிய பணியினை முற்றுவிக்க விருப்பங்கொண்டு அதிலேயே தம் கருத்தை எல்லாம் செலுத்தினார். இப்போது. ஏறத்தாழ முழுதாக ஏழாண்டுகளை இட்லரின் சிறைச்சாலையில் கழித்திருந்தார். எப்பொழுதுமே தம்கணவர்க்கு அருகிலிருந்து ஒவ்வொன்றையும் அறிந்துதவி வந்த அன்னாரின் துணைவியரும், தம் கணவரின் நிலையறிந்து உளம் நொந்தார். இறுதியாகத் தம்மிடம் எஞ்சியிருந்த பொன்னிலும், மாணிக்கத்திலும், பொருள்களிலும் பெரும்பகுதியைச் சிறைக்காவலரிடம் கொடுத்து, தம் கணவரைக் கொல்லும் கட்டளை நிறைவேற்றப்படும் முன்னர், அவரை வேறு எங்காவது ஓர்இடத்திற்கு மாற்றிவிடல் வேண்டும் என்று, எவருமறியாவண்ணம் ஒப்பந்தமும் செய்து கொண்டார். கணவரும், உலீப்சிக்கு என்னும் இடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டார்.

திராக்டென்பெர்க்கின் அன்பு மனைவியும் அவரைப் பின் தொடர்ந்தார். ஆனால் அவர்கள் சென்ற அவ்விடத்தில் குண்டுகள் வீசப்பெற்று, ஒரே குழப்பமும், துன்பமும் நிறைந்திருப்பதைக் கண்டனர். உண்ண உணவோ, குளிரைப் போக்கிக் கொள்ள நெருப்போ, வேறு ஏந்துகளோ, எவையுமேயின்றி மிகத் துன்புற்றனர்.

குண்டு வீச்சில் இறந்துகிடந்தவர்களைப் புதைப்பதற்கும், வேறுசில இன்றியமையாக்கட்டளைகளைப்பிறப்பித்தற்கும் கூடப் போதிய அறிவுத் தெளிவின்றிக் குழம்பிக்கிடந்த, புரட்சியாளர்களிடம் மனவுறுதி மிக மிகக் குன்றிப் போயிருப்பதை நன்கு

அறிந்து கொண்டார் திராக்டென்பெர்க்கு. இந்தச் சூழலை நன்கு பயன்படுத்திக்கொண்டு, தப்பி ஓடிவிட முடிவு செய்தார். தம்முயிரை அவருயிருடன் இணைத்துவிட்ட திராக்டென்பெர்க்கின் துணைவியும் அவருடன் வந்து சேர்ந்தார். இருவரும் சிறையினின்றும் தப்பினர். ஆனால் விரைந்து சென்று கொண்டிருந்த போது, வழியில், அவரை அடையாளம் தெரிந்துகொண்ட படையதிகாரியொருவர் அவரைச் சிறைப்பிடித்து "திரைசுடீ" (Trieste) என்ற ஊரின்கண்ணிருந்த உழைக்கும் குழுவொன்றினுக்கு அடிமையாக அனுப்பிவிட்டார். இங்கே, அவர் சற்றே அமைதியொடு நாட்களைக் கழித்தார். ஏனெனில் இக்குழுவில் வேலையும், மேலாளரின் கொடுமையும் மிகவும் குறைந்திருந்தன. அவரைப் பின்தொடர்ந்த அவருடைய மனைவியார், காவலரிடம் தனியே சென்று தம்மிடம் எஞ்சியிருந்த பொருளைக் கொடுத்துத் தம் கணவரை விட்டுவிட வேண்டினர். எவ்வாறோ ஒப்பிய அவர்களும், அவரை எவருமறியாது விடுவித்தனர்.

1945-ஆம் ஆண்டில், உடுக்களே தெரியாமலிருந்த இருள் மிகுந்த நள்ளிரவொன்றில், பிழைத்தோமென்று எண்ணிய அவர்கள் சுவிட்சர்லாந்து நாட்டை நோக்கி விரைந்தனர். ஒளிபடைத்த கண்களொடும், வலிமைமிக்க நெஞ்சொடும், சுவிட்சர்லாந்தை வந்தடைந்த அவர்களுடைய மகிழ்விற்கு எல்லையும் இல்லை; அளவும் இல்லை. தாம் கண்டுணர்ந்த முறையினை முற்றுப் பெறவைத்த அவர், 'சுரிச்சு' நகரில் 1950-ஆம் ஆண்டில் பள்ளியொன்றினைத் தோற்றுவித்தார். அப்பள்ளியில்தான் சற்று முன்னர் நீங்கள் வியப்புகள் பல கண்டீர்கள்" என்றுமுடித்த அவரைஏறிட்டுநோக்கியநான், அஞ்சா நெஞ்சம் கொண்ட அறிஞரொருவரின் வாழ்க்கையைத் திறம்படக் கூறியதற்காக என் கண்களால் நன்றியைக் கூறினேன்.

அவரிடம் விடைபெற்று நடந்த நான், நம்மில் பலரும் துன்பம் வந்தபொழுது துவண்டு போகின்றோம். நம் அறிவாற்றலையும், துணிவையும்கூட மறந்து, சோம்பி, துன்பத்தை எதிர்த்துப் போரிட வியலாதவராகி விடுகின்றோம்; ஆனால் கடமையைக் கண்களெனக் கொண்டவர்களும்; தமக்கென ஒரு குறிக்கோளைக் கொண்டு வாழும் திராக்டென்பெர்க்கு போன்றவர்களும் என்றுமே துன்பத்தைக் கண்டு அஞ்சார் போலும்; என்றும் துன்பந்தான் அவர்களைக் கண்டு துன்புறும்போலும்; என்று எண்ணிக்கொண்டே, சாலையில் நடக்கின்றேன். என் மனக்கண்களின் முன்னர் அவர் பட்ட துன்

முத்துமொழிகள்

உங்களுடைய இளைஞர்களின் உள்ளத்தைக் கவர்ந்துள்ள எண்ணம் எதுவென்று கூறுங்கள். அடுத்த தலைமுறையினரின் ஒழுக்கம் எதுவாக இருக்கும் என்று நான் கூறிவிடுகிறேன்.

—எட்மண்டு பர்க்கு.

மாந்தனின் கண்டுபிடிப்புகளிலெல்லாம் மிகவும் சிறந்தது எல்லார்க்கும் கல்வி புகட்டக் கூடிய பள்ளிகளை ஏற்படுத்தியதுதான்.

—தாமசு மேன்.

பற்பல அரசுகளின் அமைப்புகளைப்பற்றி நான் ஆராய்ச்சி செய்யச்செய்ய என் தாய்நாட்டை நான் ஏன் இன்னும் மிகுதியாக விரும்பவேண்டும் என்பதற்கான காரணங்களும் மிகுந்துகொண்டே போகின்றன.

—உருசோ.

சாவில்லாத ஒரேதாய் மாந்தனுக்கு உண்டு. அதுதான் அவன் தாய்நாடு.

—காண்டேகர்.

என்னுடைய கட்டளைகளை மதிப்புக்காக ஏற்றுக்கொள்ளாதீர்கள். பொன்னை நெருப்பிலிட்டு ஆராய்வது போன்று அவற்றை ஆய்வுசெய்து பாருங்கள்.

—புத்தர்.

(முன்பக்கத் தொடர்ச்சி)

பங்கள் படம்போல நிழலிடுகின்றன. இவரைப் போலவே, நாமும், துன்பம் வந்துழி நம் நோக்கொன்றினையே மனத்திற்கொண்டு நெஞ்சுறுதியொடு செயலாற்றிப் புகழ்பெறுதல் இயலாதா? என்று என்னையே கேட்டுக்கொண்டிருந்த பொழுது, சேவலின் கூவலும், குயிலின் இன்னிசையும் என் காதுகளில் மெல்ல விழக்கேட்ட நான் படுக்கையில் படுத்திருப்பதையும், விடியற்காலை மணி நாலரை ஆகிக்கொண்டிருப்பதையும் உணர்ந்தேன். முன்னாள் இரவில் நெடுநேரம்வரை, அறிஞர் திராக்டென்பர்க்கின் வாழ்க்கை வரலாற்றைப் படித்துக் கொண்டிருந்ததும் முற்றும் படித்து முடிந்த பின்னர் படுக்கையில் படுத்து அவருடைய ஆற்றலையும் துணிவினையும் எண்ணிக்கொண்டிருந்ததும் இப்பொழுதுதான் சிறிது சிறிதாக நினைவிற்கு வந்தது. நாம் என்னென்னவற்றைப் படித்தோமோ, அவை மட்டுமன்றி சுவிட்சர்லாந்திலுள்ள சுரிச்சு நகரத்திற்கே சென்று அறிஞர் திராக்டென்பெர்க்கின் பள்ளியில் பயிலும் மாணவர் ஒருவருடன் பேசுவதைப் போலவும், அவருடன் அமர்ந்து, வகுப்பில் கணக்குப்பாடம் கற்றுக்கொள்வதைப் போலவும் கனவினைக் கண்டுவிட்டோமே என்று எண்ணி வியப்பொடு, மகிழ்ந்து, படுக்கையை விட்டெழுந்தேன். ○

ஏதிலியின் வாய்க்குச் சோறு ஊட்டாத ஓர் ஆண்டவனை அல்லது சமயத்தை, கைம்பெண்ணின் கண்ணீரைத் துடைக்காத ஒரு கடவுளை அல்லது சமயத்தை, நான் நம்பமுடியாது.

—விவேகானந்தர்.

மக்கள் கொள்கைகளை மறந்து, சடங்குகளைப் போற்றும் கண்மூடிகளாக இருப்பதால்தான் எத்தனைப் பெரியோர்கள் பிறந்தும் உலகம் இன்னும் உருப்படாமல் கிடக்கின்றது.

மு வ.

முற்காலத்தில் சமயக்குரவர்கள் பொன்னாக இருந்தனர்; அவர்களின் சிலுவை மரமாகஇருந்தது. தற்காலத்தில் அவர்களின்சிலுவை பொன்னாக உள்ளது. அவர்கள் மரமாக இருக்கின்றனர்.

—தால்சுதாய்.

வெற்றிகளிலும் பின்னர் வெட்கப்படக்கூடிய வெற்றியுண்டு; தோல்விகளிலும் பின்னர் விளம்பரப்படுத்தத்தக்க தோல்வியுண்டு; இதனை உணர்ந்தால் உலகில் உயர்வுண்டு.

—நெ து சுந்தரவடிவேல்.

வீணர்களும் வம்பர்களும் நிறைந்துள்ள ஒரு நாட்டைக் காட்டிலும் சான்றோர்களைக் கொண்ட கல்லறைக்கு மிகுந்த உயிர்க்களை உண்டு.

—மாசினி.

நீங்கள் எதை விரும்பமாட்டீர்களோ அதை நீங்கள் பிறர்க்குச் செய்யாதீர்கள்.

—கன்பூசியசு.

துன்பமெனும் பறவை உன் தலைமேல்வந்து வட்டமிடுவதை நீ தடைசெய்ய முடியாது. ஆனால் அஃது உன் தலை முடியில் அமர்ந்து கூடுகட்டிக் குஞ்சுபொரித்துக் கொள்ளாமல் உன்னால் தடுக்க முடியும்.

—சீனப்பழமொழி.

ஒவ்வொரு சலவைக் கல்லிலும் ஓர் உருவம் பொதிந்துள்ளது. தேவையற்ற பகுதிகளைச் செதுக்கித் தள்ளிவிடின் அது தோற்றமளிக்கும்.

—அடிசுடாட்டில்.

மேதைகளிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியது ஒன்றுமேயில்லை. முட்டாள்களிடமிருந்து நாம் கற்றுக்கொள்ளவேண்டியது மிகுதியாக உண்டு. —பெர்னட்சா.

(தொகுப்பு: இரா. வேலம்மாள், க. மு.)

'திருக்குறளும் தமிழினமும்' உயர்ந்த, கருத்துச் செறிவு மிக்க ஆசிரியவுரை. படிக்கப் படிக்க உள்ளம் புளகமுறுகின்றது. 'பாய்புலியே எங்கே உன் சீற்றம்', 'பெங்களூர் பாவாணர் தமிழ் மன்றத்திற்கு வாழ்த்து' இதழுக்குத் தனிச்சிறப்பை அளிக்கின்றன. பாவாணர் இவ்விதழில் பெரும்பங்கு கொண்டுள்ளதைக் கண்டு உள்ளம் பூரிக்கின்றது. 'தமிழர்க்குத் தனியாண்டு' சிறப்பாக அமைந்துள்ளது. 'நூற்றாசிரியம்' இல்லாதது கண்டு பெரிதும் ஏமாற்ற மடைந்தோம். எதுவரினும் நாங்கள் துணையுள்ளோம்; எதற்கும் அஞ்சாமல் நேர்மையைத் துணைக்கொண்டு உங்கள் வழிநடப்பீராக.

—எழிற்செல்வன், எதுமலை. (சுறவம்–க.)

பெருமதிப்பிற்குரிய ஐயா, போராட்டத்தால் கல்லூரிகள் மூடப்பட்டிருப்பதால் வீட்டில்தான் இருக்கின்றேன். நிலைத்த பயனொன்றும் விளைவதாகத் தெரியவில்லை. தமிழர் பெரும்பாலும் தம் வீடு, தம் மக்கள் என்ற நினைவுதவிர, தமிழ், தமிழ்நாடு என்னும் பரந்த எல்லையில் ஒருவரேனும், கனவிலும் நினைப்பதாகத் தெரியவில்லை. தமிழிற்கோ தமிழ்த்திரு நாட்டிற்கோ விடிவு பிறக்குமென்று என்றால் நினைக்கவே முடியவில்லை. மாணவர் பெரும்பாலாரிடை போலி அரசியலுணர்வே வளர்ந்து வருகின்றது. போதாக் குறைக்கு, குழு மனப்பான்மை அவர்களைப் பற்றி, அலைக்கழித்து வருகின்றது...வெற்றாரவாரம் நிறைந்த இந்த உலகில் உண்மையான தமிழ்ப் பற்றுள்ளோர் சிலரைத்தான் காணமுடிகிறது. அவரையும் போலிகள் இழித்தும் பழித்தும் வருகின்றனர். என் செய்வது? இதை எழுதுவதற்கே என் நெஞ்சம் வருந்துகின்றது. என்றும் தங்கள் நலம் நாடும் அன்புத்தொண்டன்.

—நடராசன்.—திருவில்லிப்புத்தூர். (18-12-68)

தமிழ்த்தாயின் உரமிக்க பெருமகனே! தங்களது தன்னலங் கருதாத் தமிழ்த் தொண்டிற்குத் தலைதாழ்த்தி வணங்குகின்றேன். என்னைப் போன்ற தமிழ் மாணவர்களுக்கும் தமிழ் மக்கட்கும் தென்மொழி மிகப் பயன் அளிக்கின்றது. தென்மொழியைத் தொடர்ந்து படித்து இன்புறுபவர்களில் நானும் ஒருவன். அடுக்கடுக்காய் இடர்ப்பாடுகள் வரினும் விடாமுயற்சியுடன் 'தென்மொழி' யால் தாங்கள் பாடாற்ற வேண்டும் என்று உங்களைப் பணிவன்புடன் வேண்டிக் கொள்கின்றேன்.

—ந சி. சீனியப்பன், உத்தப்பநாய்க்கனூர்–மதுரை.

ஒண்டமிழொளியை உள்ளவாறு எடுத்து வீசும் தென்மொழியின் அன்பர்களுள் நானும் ஒருவன். மலர்சுற்றும் வண்டென என் உள்ளம் தங்கள் சொற்களையே சுற்றிவர முற்படுகிறது. தங்களின் வழியினை நன்கு ஓர்ந்து உயரவே என் உள்ளம் பொங்கியெழுகின்றது. தென்மொழி என்ன விரும்புகிறதோ அதை நிறைவேற்ற என்னுள்ளம் விழைகின்றது; நெஞ்சம் துடிக்கிறது. தமிழ் வாழவே தாங்கள் வாழுகின்றீர்கள் என்ற எண்ணம்என்னுள் பதிந்துவிட்டுள்ளது. நம்பிக்கை நல்லொளி காட்டுகிறது. தென்மொழியே எனக்கு—ஏன்—என் போன்ற பல இளம் நெஞ்சங்களுக்குத் தமிழுணர்வு பொங்கியெழப் பெரிதுங் கரணியமாக உள்ளதென அறுதியிட்டு உரைப்பேன். தென்மொழியின் எண்ணத்தை நிறைவேற்றிய ஒரு நிகழ்ச்சி இது. வத்தலக்குண்டில் ''ஸ்டார் பிரஸ்'' என்ற அச்சகத்தின் உரிமையாளரைப் பார்த்து, அதனை 'விண்மீன் அச்சகம்' என்று மாற்ற வேண்டித் தக்கவாறு அன்புடன் எடுத்துக்கூறி வெற்றியும் பெற்றேன்.

—அருட்செல்வன், தே. கல்லுப்பட்டி, மதுரை.

(அட்டைப் பாடல் தொடர்ச்சி)

மட்டில் முதுமைப் பெரியார் பயிற்றிய மாணவருள்
குட்டி அரிமா எனவெளி யேறிக் குழக்குழுவாய்த்
தட்டி எழுப்பிடு வீறுரை யால்இத் தமிழ்நிலத்துள்
கொட்டி விதைத்தவை காய்க்குமுன் ஆவி குலைந்ததுவே!

முந்தையர் மொய்ம்புகழ் மீளக் கொணர்ந்திட முன்னிமுன்னி
வெந்துய ரோடமைச் சேற்றிந்திப் போரினில் வெற்றிகண்டு
செந்தமிழ்க் கேதகு செய்வினை முற்றுமாய்ச் செய்வதற்குள்
எந்தமிழ்ச் சேய்க்கிங் கிடர்வந்த தேஉயிர் ஏகுறவே!

தந்தை பெரியார் தலைப்படு போர்க்குத் தலைப்படையாய்
முந்தை அவர்வழிப் பற்றி யெழுந்த முதல்மகனாய்
எந்தை தமிழ்க்கென் றிராப்பகல் ஆற்றுமோர் ஏவலனாய்
வந்து நறும்பணி கொண்டான்; முடியுமுன் வாடினனே!

தமிழ்மொழிக் கென்றே தகவாம் சிலசெயல் தம்பெருமை
அமிழ்விலா வாறவன் ஆற்றிலன் என்பதும் ஆமெனினும்
இமிழ்உல கெங்கும் புகழ்பெற இன்னும் இருந்திருந்தால்
தமிழ்நா டொருவா றுருப்பெறும் அன்னான் தலைமையிலே

மாற்றற் கிலராய் மதமும் குலமும் வலிந்துபற்றிச்
சாற்றற் கரிதாம் இழிவுகற் பித்துச் சமவுரிமை
ஆற்றற் கணையாய் அடுத்துக் கெடுத்திடும் ஆரியரும்
போற்ற நடந்தான் அதுதான் அவன்றன் புகழ்க்குறையே!

அன்னை மொழிக்கும் இனத்தினுக் கும்வந்த ஆரியரால்
இன்னும் விலகாக் கொடுந்துயர் சீய்க்க எழுந்தியிவன்
முன்னை யெடுத்தநற் கொள்கை முழுதும் முடித்திருந்தால்
பின்னை இலரென வேபெற் றிருப்பான் பெரும்புகழே!

பனியுங் குளிரும் வெயிலும் கருதாக் கவலையொடு
தனியுந் திறமும் பழமையும் வாய்ந்த தமிழ்க்குழைத்துக்
கனியும் மொழியும் உணர்வும் கருத்தும் கலந்தருத்த
இனியும் வருமோ ஒருவன் இவன்போலும் எம்மவர்க்கே!

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.